
பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 01 செவ்வாய்க்கிழமை 16.05.2023 கதிர் 187

# ஆட்சியைக் கவிழ்க்கலாம் அரசைக் கலைக்க முடியாது

## அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு



ஆட்சியைக் கவிழ்க்க மக்களுக்கு உரிமை உண்டு ஆனால் அரசை கவிழ்க்க யாருக்கும் உரிமை இல்லை. அத்தகைய முயற்சியானது ஒரு பயங்கரவாதச் செயல் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தினார்.

காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் பங்கேற்றுக் கொண்ட நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு 2

## இது ரகசியம் அல்ல!

எள்ளு எண்ணெய்க்குக் காயுது எலிப் புளுக்கை ஏன் காயுது என்பார்கள். அது போன்று ஆளுநர்களுக்கு மாற்றம் சரி, மாடுகளுக்கும் ஏன் இடம்மாற்றம் என்பதுதான் விடை தெரியாத பெரும் கேள்வி. ஆளுநருக்கும் மாட்டுக்கும் என்ன சம்பந்தம் என்று தலையைப் பிய்த்துக் கொள்கிறீர்களா, எனக்கும் அப்படித்தான் இருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர்கள் உட்பட மூன்று மாகாண ஆளுநர்கள் நேற்றுத் திடீரெனப் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள். அதற்கு முன்னதாகவே அவர்களை கடிதங்களைக் கொடுத்துவிட்டுத் தாமாகவே பதவியை விட்டு விலகிச் செல்லுமாறு ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்தியிருந்தது. ஆளுநர் மாற்றங்களைச் செய்வதில் ரணில் தீவிரமாக இருந்ததால் அவர் லண்டனுக்கு - புதிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் மணி முடி தரிப்பு விழாவில் கலந்துகொள்ள - செல்வதற்கு முன்பாக இந்த 2

## மட்டக்களப்பு கல்லடியிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி



(பழுவூரான்)

மட்டக்களப்பு, மே 16

கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கல்லடி சிவானந்தா தேசியப் பாடசாலைக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி திங்கட்கிழமை (15) வழங்கப்பட்டது.

கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ கணேச லோகநாதன் குருக்கள் தலைமையிலான குருமார் மட்டக்களப்பிலிருந்து கல்லடி வழியாகச் சென்ற பொதுமக்கள் மற்றும் சிறைக் கைதிகளுக்கும் பரிமாறினர்.

# பேச்சில் இணக்கம் இல்லை

## குழு நியமித்து காலத்தை வீணடிக்க விரும்பவில்லை என்று சம்பந்தன் தலைமையிலான தமிழ் அரசு எம்பிக்கள் கருத்து

**கொழும்பு, மே 16**

அரசுத் தலைவருக்கும் வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு இணக்கம் ஏதுமின்றி முடிந்தது. அரசமைப்பில் ஏற்கனவே உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்குக் குழு ஒன்றை நியமிப்பதாகவும் அதில் தமிழ் உறுப்பினர்களையும் இணைந்து செயற்படுமாறும் அரசுத் தலைவர் விடுத்த அழைப்பை ஏற்க தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறுப்புத் தெரிவித்துவிட்டனர். அது காலத்தை வீணடிக்கும் செயல் என்று அவர்கள் தெரிவித்தனர். 2

## ஜனாதிபதி தேர்தலை முன்கூட்டி நடத்த எதிர்க்கட்சி முழு ஆதரவு



ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான யோசனையை அரசு முன்வைத்தால் அதற்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதற்காக விசேட சட்ட திருத்தம் தேவையெனில் அதற்கான நகர்வுக்கும் முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சிகளுக்கிடையிலான கூட்டமொன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று நடைபெற்றது.

மேற்படி சந்திப்பின் போது இது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டது என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் சவாலை எதிர்கொள்வதற்குத் தாம் தயார் எனவும், அரசு தயாரெனில் அது தொடர்பில் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் எனவும் சஜித் சவால் விடுத்தார். (02)




## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஊர்தி யாழ். நகரை வந்தடைந்தது

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி முல்லைத்தீவில் இருந்து புறப்பட்ட ஊர்திப் பவனி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. ஞாயிற்றுக்கிழமை மல்லாவியை வந்தடைந்த ஊர்தி நேற்றுக் காலை அங்கிருந்து புறப்பட்டு கிளிநொச்சி ஊடாக யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணித்தது. சாவகச்சேரியில் ஊர்திக்கு படையினரால் சிறு இடைஞ்சல் ஏற்படுத்தப்பட்டது. எனினும் பின்னர் ஊர்தி தனது பயணத்தைத் தொடர்ந்தது.

2009ஆம்ஆண்டுமுள்ளிவாய்க்காலில் தமிழினம் கொத்துக்கொத்தாகக்கொன்றழிக்கப்பட்டதை அடையாளப்படுத்தி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் வாரம் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் முற்றத்திலே மாபெரும் நினைவேந்தல் நிகழ்வுகளும் இடம்பெறுவது வழக்கம்.

இதன் ஒரு அங்கமாக தாயக நினைவேந்தல் 2

## கொழும்பு இயல்புக்கு திரும்பியது விசேட பாதுகாப்பு நிலை தளர்வு

கொழும்பில் பலப்படுத்தப்பட்டிருந்த விசேட பாதுகாப்பு திங்கட்கிழமை முற்பகல் முதல் நீக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்தூவ அறிவித்துள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், இராணுவம் மற்றும் பொலிஸ் கலகத் தடுப்பு பிரிவினர் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு முதல் பலத்த பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். கொழும்பின் வேறு பல பகுதிகளிலும் கூட பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்த ரணி நிஹால் தல்தூவ குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் தற்போது அவ்விதமான விசேட பாதுகாப்புக்கள் நீக்கப் பட்டு வழமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கட்சி தாவும் ஹரிசனுக்கு சஜித் அணி தக்க பதிலடி



முன்னாள் அமைச்சர் பி. ஹரிசன் கட்சியில் இருந்து வெளியேறுவதால் எமது கட்சிக்கு எவ்வித தாக்கமும் ஏற்படப்போவதில்லை.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம். பி. தெரிவித்தார்.

ஹரிசன் தவறான முடிவை எடுத்து தனது அரசியல் வாழ்வுக்கு முடிவைத் தேடிக்கொண்டுள்ளார் என்றும் ரஞ்சித் மத்தும பண்டார குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் 2

## சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க கடும் சட்டம் உருவாக்கப் பணிப்பு

சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க கடுமையான சட்டத்தை உருவாக்குமாறு சட்டத்துறையினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ஒரு சில ஆசிரியர்கள், முதியவர்கள் மற்றும் சமூகத்தின் பல்வேறு தரப்பினரால் தொடர்ச்சியாக இடம்பெறும் சிறுவர் துஸ்பிரயோகங்களை விரைவாக தடுக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவ்வாறான களுத்துறை ஹோட்டல் ஒன்றின் மேல் மாடியில் இருந்து குதித்து 16 வயது சிறுமி உயிரிழந்த சம்பவம், களுத்துறை தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவரால் 16 சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை போன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றமை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி மேற்படி பணிப்புரையை வழங்கினார்.

நாட்டின் குழந்தைகளை பாதுகாப்பதற்கு தனியான சட்டமொன்றை கொண்டு வர வேண்டும்;. அதற்காக தற்போதுள்ள சட்டங்களைத் திருத்த வேண்டியது அவசியமாகின்றது. இந்தச் சட்டக்கட்டமைப்பை தயாரிக்கும்போது, கையடக்கத் தொலைபேசி, சமூக வலைத் தளங்கள் போன்ற வற்றை பயன்படுத்தி 2

## மொட்டுவின் கைதியே ரணில் ஐக்கிய மக்கள் சக்தி விமர்சனம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மொட்டுக்கட்சியின் கைதியாக மாறியுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் கொழும்பு மாநகர சபை வேட்பாளருமான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்குமாறும், மொட்டுக்கட்சியில் உள்ள ஊழல்வாதிகளுக்கு அமைச்சு பதவிகளை வழங்குமாறும், ஆளுநர்களை நீக்க வேண்டாம் என்றும் ஜனாதிபதிக்கு அத்தரப்பினர் சவால் விடுத்து மொட்டுக்கட்சியினர் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். 2

## கடன் மறுசீரமைப்பு விடயத்தில் நாணய நிதியம் தலையிடாது

கடன் மறுசீரமைப்பு தொடர்பான விடயங்களில் தலையிடுவதில்லை என்று சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் கிருஷ்ண ஸ்ரீநிவாசன், மற்றும் இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி பீற்றர் புரூவர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் திங்கட்கிழமை நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய 2

## சாவடைந்த களுத்துறை மாணவி 20 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை

### நீதிமன்றில் வெளியானது உண்மை

களுத்துறையில் ஐந்து மாடி விடுதியின் மூன்றாம் மாடியிலிருந்து முழு நிர்வாணமாக விழுந்து உயிரிழந்த 16 வயதான பாடசாலை மாணவி பணத்துக்காக விற்கப்பட்டுள் ளர் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான வழக்கு, திங்கட்கிழமை களுத்துறை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த மாணவி பணத்துக்காக விற்கப்பட்டுள்ளார் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மாணவியைச் சந்திப்பதற்குச் 2

# கோட்டாபய சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவில்லை அதனாலேயே அவர் நீக்கப்பட்டு ரணில் தெரிவானார்

## புது விளக்கம் தருகின்றார் மொட்டு கட்சி செயலாளர்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷநாட்டில் ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை முறையாக செயற்படுத்தாமையினாலேயே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் பிரதிநிதியாக மாகாண ஆளுநர்கள் செயற்படுகிறார்கள். ஆளுநர் நியமனம், பதவி நீக்கம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. ஆளுநர் பதவியில் மாற்றம் ஏற்படுத்தப் போவதாகக் குறிப்பிடப்படுகிறது. யாரை ஆளுநராக நியமிக்க வேண்டும். யாரைப் பதவி நீக்கம் வேண்டுமென நாங்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கவில்லை.

நாட்டில் ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதிப்படுத்தவில்லை. 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

ரணில் நாடு திரும்பியதும் புதிய ஆளுநர்களை நியமிப்பதற்கு வசதியாக நான்கு ஆளுநர்களும் பதவி விலகியிருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடக்கவில்லை.

தற்போது பதவியில் இருக்கும் ஆளுநர்கள் அனைவரும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்களில் சிலரை மாற்றுவதில் பொது ஜன பெரமுனவுடன் ரணில் நீண்ட நாள்களுக்கு முன்னரே ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்திருந்தார்.

இந்த நால்வரில் முக்கியமானவர் முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிரல் ஒஃப்த ஃப்லீட் வசந்த கரன்னாகொட. வடமேல் மாகாண ஆளுநராக இருந்தவர். கோட்டாபயவிற்கு நெருக்கமானவர். அண்மையில் அவரும் மனைவியும் அமெரிக்காவிற்குள் நுழையக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டு கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்.

தான் அப்படி அமெரிக்கக் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டதைத் தடுக்க ரணில் விக்கிரமசிங்க தவறிவிட்டார் என்று கோபப்பட்டாரோ என்னவோ, ஆளுநர் பதவியிலிருந்து விலக அவருக்கு மனமில்லை. முன்னாள் பிரதம நீதியரசரான சர்ச்சைக்குரிய சரத் என். சில்வாவிடம் சட்ட ஆலோசனை பெற்றார். அவரோ ஆளுநர்களை நியமிக்கத்தான் ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கின்றது. அவர்களை நீக்க அதிகாரமில்லை, அப்படி நீக்கினால் அதை எதிர்த்து நீதிமன்றம் செல்லலாம் என்று ஆலோசனை சொன்னார்.

இதையடுத்து ஆளுநர் பதவியை விட்டு இறங்குவதேயில்லை என்று கரன்னாகொட தீர்மானித்தார். தான் தீர்மானித்தது மட்டுமல்ல, பதவி விலகத் தயாராகிவிட்ட கிழக்கு ஆளுநரையும் குழப்பிவிட்டார். இவர்கள் என்ன செய்கிறார்களோ அதோடு ஒத்து ஓடவேண்டியதுதான் என்று வடக்கு ஆளுநரும் தீர்மானித்துவிட நால்வருமே பதவியிலிருந்து விலகாமல் விட்டார்கள். ரணில் பனங்காட்டு நரி, இவர்களின் சலசலப்புக்கள் அஞ்சுபவரா? உயர் நீதிமன்றத்தின் கட்டளையையே தூக்கிக் கடாசிவிட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலையே ஒத்தி வைத்து சட்ட ஓட்டைகளுக்குள்ளால் புகுந்துவிளையாடும் அவருக்கு இவர்கள் எம்மாத்திரம்!

இருந்தாலும் மொட்டுக் கட்சியுடன் முரண்பட்டுவிடாமல் இருக்கும் நோக்கத்தோடு இவர்களை நியமித்த கோட்டாவுக்குத் தகவல் அனுப்பி, நால்வரையும் அவரைக் கொண்டு பதவி விலகும்படி சொல்ல வைத்தார் ரணில். கோட்டாவும் நால்வருக்குமே பதவி விலகிவிடுங்கள், பிரச்சினை வேண்டாம் என்று தெரிவித்தார். ஆனாலும் கரன்னாகொட அதை ஏற்கவில்லை, பதவி விலகாவிட்டால் ரணிலால் தம்மைப் பதவி விலக்க முடியாது என்று நினைத்த அவர் மற்றவர்களையும் குழப்பியடித்து தொடர்ந்தும் பதவியில் இருக்கத் திட்டமிட்டார்.

ரணில் பார்த்தார், இனியும் காலம் தாழ்த்திப் பயனில்லை என்று அதிரடியாக நால்வரில் மூவரைத் தூக்கிக் கடாசிவிட்டார். இதனை ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. பதவி விலக்க ரணிலுக்கு அதிகாரம் இல்லாதபோது எப்படி இது முடியும் என்றால்? அதைப் போய் உயர் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டுக் கேட்டுக்கொள் என்று ரணில் தினாவெட்டாகப் பதில் சொல்லக்கூடும். அவர் செய்தது சரியா தவறாக என்று தீர்ப்பு வருவதற்குள் அவரது பதவிக் காலம் முடிந்துவிடும். எனவே இனிப் பொத்திக் கொண்டிருப்பதைத் தவிர ஆளுநர்களுக்கும் வேறு வழியில்லை.

இதில் வடக்கு மாகாண ஆளுநரின் நிலைதான் பரிதாபம். மற்றையவர்கள் சொன்னதை நம்பிக்கொண்டு, அவர்களோடு சேர்ந்து நின்றவர், நேற்றுப் பிற்பகல் பதவி விலக்கியாயிற்று என்ற செய்தி வந்ததும் பதறிப்போனார். 3.30 மணியளவில் மூடை முடிச்செல்லாம் கட்டு என்று அவரிடமிருந்து இங்குள்ள பணியாளர்களுக்கு உத்தரவு பறந்து வந்தது. அப்போதும் தன்னைப் பதவி விலக்கியாயிற்று என்று அவர் சொல்லவில்லை. மூடை முடிச்சு எல்லாவற்றையும் கட்டி அனுப்பு கொழும்பு அலுவலகத்தில் இருந்து நான் பணியாற்றுகின்றேன் என்றுதான் சொல்லியிருக்கிறார். ஆனால், சில மணி நேரத்திலேயே ஜனாதிபதி செயலகம் அறிக்கைவிட்டு எல்லாவற்றையும் அம்பலப்படுத்திவிட்டது.

ஆளுநரை நீக்கிவிட்டார்கள். அதனால் அவர் யாழ்ப்பாணத்தைக் காலி செய்துகொண்டு புறப்பட்டார் என்பது சரி. ஆனால் அவரோடு சேர்த்து ஆளுநர் மாளிகையில் இருந்த இரண்டு மாடுகளையும் உடனடியாக கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்யும்படியும் உத்தரவிடப்பட்டிருக்கின்றது. இந்த மாடுகளுக்கு ஏன் இடம் மாற்றம், இந்த மாடுகள் எப்படி ஆளுநர் மாளிகைக்குள் வந்தன என்கிற விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை. நீதிமன்றத்தால் கையகப் படுத்தப்பட்ட மாடுகள் அவை என்று ஒரு தகவல் தெரிவித்தது, ஆளுநர் பில்லி சூனியங்கள் போன்ற மந்திர தந்திரங்களில் நம்பிக்கை கொண்டவர், அதனால் அவற்றிலிருந்து தப்ப மாடுகளை வளர்த்திருக்கலாம் என்று ஒரு தரப்பினர் தெரிவித்தனர். இவையெல்லாம் உறுதிப்படுத்தப்படாத ஊகங்கள் மட்டுமே.

ஆளுநர் மாளிகைக்கு மாடுகள் ஏன் வந்தன? இப்போது ஆளுநர் மாற்றத்துடன் அவற்றுக்கும் ஏன் இடம் மாற்றம் வழங்கப்பட்டுள்ளது? இனித்தான் உள்ளே இறங்கி ஆராயவேண்டும்.

-இடி மின்னல்-

## ஆட்சியைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் மாகாண சபையின் முதலமைச்சராகவும் தற்போது அமைச்சரவை அமைச்சராகவும் செயற்படுகின்றேன். எனக்கு கீழ் உள்ள நிறுவனங்களுக்கு நான் செல்வதில்லை. அங்கு சென்று நான் செல்வாக்குச் செலுத்துவதில்லை. அந்த நிறுவனங்கள் சுதந்திரமாகச் செயற்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை நான் எப்போதும் நிலைநிறுத்த முயற்சிக்கிறேன்.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் பொதுமக்கள் தினத்தை நடத்துகிறோம். பொதுமக்கள் தினத்தில் வரும் முறைப்பாடுகள் குறித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அருகில் வைத்து, பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுகிறது.

தற்போது அரசு நிறுவனங்களில் நடக்கக்கூடாதவைகள் நடக்கின்றன. அவை முடிந்தவரை குறைக்கப்பட வேண்டும். பந்தை வேறொருவருக்கு அனுப்புவது சரியில்லை. மக்கள் பணமே அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்றது. எனவே, கடன் வாங்காமல், கிடைக்கும் பணத்திற்காக உழைக்க வேண்டும்.

நான் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதும், முதலில் செய்தது நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரச்சினைகளைத் தீர்த்ததே. அங்கு தகவல்களை அறிந்ததும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாற்றம் செய்யப்பட்டனர். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிலும் இவ்வாறான வேலைத்திட்டத்தை முன்னெடுத்தோம். ஒரு நிறுவனத்தில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும். இல்லையெனில், அதன் அமைப்பைப் பராமரிக்க முடியாது.

புதிய வழியில் சிந்தித்து, புதிய வழியில் செயல்பட்டால், எங்களால் நீண்ட பயணம் செல்ல முடியும். நாட்டின் தற்போதைய நிலையை என்னை விட அரச அதிகாரிகளாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். பாரம்பரிய நிறுவனமாக முன்னேறாமல், புதிய வழியில் சிந்தித்து வருமானம் ஈட்ட வேண்டும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு இந்நாட்டின் முன்னாள் பிரதமர்கள் பணியாற்றிய அமைச்சாகும். இந்த அமைச்சு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சு ஆகும்.

இதன் நிறுவனங்களிற்கு வரும் மக்கள் நடத்தப்படும் விதம் குறித்து எங்களுக்கு பல்வேறு முறைப்பாடுகள் வருகின்றன. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரும்போது, அவர்களை அடி பணிந்து வரவேற்கிறோம். ஆனால், நம் நாட்டில் ஒரு முதலீட்டாளர் ஏதாவது செய்யப் போகும் போது அதற்கு உதவுவதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.

இலங்கையில் இருந்தாலும் சரி, வெளிநாட்டில் இருந்தாலும் சரி, வரும் முதலீட்டாளர் ஒன்றே. இலங்கைக்கு நல்லது நடக்குமாயின் அந்த முதலீட்டை நாம் செய்ய வேண்டும். இதுபோன்ற இடங்களிலிருந்து வேலை செய்யாதபோது அந்த நபர்கள் என்னிடம் வருகிறார்கள்.

நான் இந்த அமைச்சுப் பொறுப்பை ஏற்றது முதல் முடியாதவர்கள்தான் என்னிடம் வந்துள்ளனர். தவறு செய்பவர்கள் எப்படியாவது அதிகாரிகள் மூலம் தங்கள் வேலையைச் செய்து கொள்கிறார்கள். நகர அபிவிருத்தி அதிகாரசபையானது ஒரு புதிய முறையான பிரித்தெடுக்கும் முறையைக் கொண்டிருந்தது. நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. நட்டஈடு வழங்க முடியாவிட்டால் அவரை பதவியிலிருந்து விலக்குங்கள் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார் - என்றார்.

## பேச்சில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் புதிய அரசமைப்பு விரைவில் உருவாக்கப்பட வேண்டும். அதைவிடுத்து நிர்வாக விடயம் சம்பந்தமான பேச்சுக்களில் தொடர்ச்சியாக ஈடுபடுவது பிரயோசனமற்ற செயல் என்று தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான இரண்டாம் நாள் பேச்சு ஜனாதிபதி செயலகத்தில் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது. வெள்ளிக்கிழமை நடைபெற்றிருக்கவேண்டிய இந்தப் பேச்சுப் பின்னர் திடீரென ஒத்திவைக்கப்பட்டு நேற்று இடம்பெற்றது.

சந்திப்பின் பின்னர் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் ஆவணமொன்றை எடுத்து வந்து, சில விடயங்களை எடுத்துரைத்தார். ஜனாதிபதியிடமும் அதே ஆவணம் இருந்தது.

குறித்த ஆவணத்தில் எதிரணி வரிசையில் விக்னேஸ்வரன் மட்டுமே கையொப்பம் இட்டிருந்தார். ஏனையோர் ஆளுங்கட்சினர். அத்துடன், பிரதிநிதித்துவ அரசியல் அந்தஸ்த்து அற்றவர்களும் கையொப்பமிட்டுள்ளனர்.

இதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவித்தோம். இதனை மக்கள் பிரதிநிதிகளின் ஆவணமாக எடுத்துக்கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டோம்.

இந்த ஆவணத்தை அடிப்படையாக வைத்து ஜனாதிபதி குழுவொன்றை அமைக்கவும் முற்பட்டார். அதற்கு நாம் மறுப்புத் தெரிவித்தோம். அப்படியான குழுவொன்றை அமைத்தால் பேச்சு நடத்தப்படுவது மட்டுமே இடம்பெறும், காத்திரமாக எதுவும் நடக்காது எனச் சுட்டிக்காட்டினோம். அதில் நாம் பங்கேற்கபோவதில்லை எனவும் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தோம்.

அத்துடன், உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் புதிய அரசமைப்பு விரைவில் உருவாக் கப்படவேண்டும். இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே இடம் பெற்றுள்ளன. அறிக்கைகள் உள்ளன. ஒரு வரைபுகூட உள்ளது. இதைச்செய்வதை விடுத்து, நிர்வாகம் சம்பந்தமான பேச்சுகளில் மட்டுமே ஈடுபடுவது பிரயோசனமற்றது என்று தெரிவித்தோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பது எமது பிரதான கோரிக்கை. எனினும், இவை தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. - என்றார். (02)

## முள்ளிவாய்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் இனப்படுகொலைக்கு நீதி கோரியும் இனப்படுகொலையை இளஞ்சந்ததியினருக்கு கொண்டுசேர்க்கும் வகையிலும் முல்லைத்தீவில் இருந்து முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை நினைவு படங்கள் தாங்கிய ஊர்தி மே12 முள்ளிவாய்க்கால் கரையிலிருந்து தனது பயணத்தைத் தொடங்கியது.

இந்த ஊர்திப் பவனியானது வவுனியா சென்று மன்னார் சென்று அங்கிருந்து வெள்ளாங்குளம் ஊடாக மல்லாவி நகரை அடைந்து மாங்குளம் கிளிநொச்சி பூநகரி சாவகச்சேரி ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளது

ஊர்தியின் நான்காம் நாள் பயணத்தில் திங்கட்கிழமை காலை கிளிநொச்சி சேவைச் சந்தையில் அஞ்சலிக்காக நிறுத்தப்பட்டது. அங்கு அதிகளவான மக்கள் அஞ்சலி செலுத்தியிருந்தனர் அதனை தொடந்து குறித்த ஊர்தி சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டது. அப்போதே படையினரால் இடையூறு ஏற்படுத்தப்பட்டது

ஊர்தி தொடர்பில் கேள்வி எழுப்பிய படையினர், ஊர்தியில் பயணித்தவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு சிறிது நேரம் குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது

எனினும் பின்னர் படையினர் ஊர்தி தனது பயணத்தைத் தொடர அனுமதி வழங்கினர். யாப்பாணத்தை வந்தடைந்த ஊர்தி இன்று யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் செல்லவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்

## கட்சி தாவும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சக்தியில் இருந்து விலகி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கப் போவதாக முன்னாள் அமைச்சர் பி. ஹரிசன் அறிவிப்பு விடுத்துள்ளமை தொடர்பில் இன்று ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே ரஞ்சித் மத்தும பண்டார மேற்கண்டவாறு கூறினார். (02)

## சிறுவர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சிறுவர் துஸ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

அதன்படி உரிய சட்டங்கள் உருவாக்கப்பட்ட பின்னர் அவை துரிதமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது. பாடசாலை பாடத்திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

பெற்றோர், பிள்ளை உறவுகள் குறித்தும், வீட்டுச் சூழலில் மனநலம் தொடர்பான புதிய கருத்தாடல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் அவசியமாகவுள்ளது.

சிறுவர்களாகவுள்ள எதிர்கால சந்ததியினரைப் பாதுகாப்பதற்கு கடுமையான சட்டங்களைக்கொண்டுவரும் அதேவேளையில், பிள்ளைகளின் மனநிலையைப் புரிந்துகொண்டு பரந்த மனப்பான்மை கொண்ட பிள்ளையை உருவாக்குவதற்கும் சமூகத்தின் மனப்பாங்கை வளர்ப்பதற்கு அரச மற்றும் தனியார் நிறுவன மட்டத்தில் தனியான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும் உடன் நடடிவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## மொட்டுவின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாட்டை பொருளாதார ரீதியாக உறுதிப்படுத்த அரசியல் ஸ்திரத்தன்மை அத்தியாவசியம். மக்கள் ஆணையில்லாத தற்போதைய ஜனாதிபதி உட்பட இந்த ஆட்சி, பொலிஸ் மற்றும் இராணுவத்தை கொழும்புக்கு அழைத்து நாட்டை நிர்வாகம் செய்யும் நிலைமைக்குச் சென்றுள்ளது - என்றார்.

## கடன் மறுசீர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் கிருஷ்ண ஸ்ரீநிவாசன் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அதிகாரிகள் கடன் வழங்குநர்களுடன் நம்பத்தகுந்த முறையில் செயற்பட்டுள்ளனர். உத்தியோகபூர்வமான கடன்கொடுக்கல் வாங்கல்களுடன் எமது செயற்பாடுகள் தொடரவுள்ளன. இதன் கால எல்லையைக் கூறுவதாக இருந்தால் எதிர்வரும் செப்டெம்பரில் முதலாவது ஆய்வுக்கான எல்லை நிறைவடையும்.

கடன்மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் ஒரு நிலைப்பாட்டிலேயே உள்ளோம். அதற்கான கால எல்லை மற்றும் மறுசீரமைப்பு இணக்கப்பாடுகளில் நாம் தலையீடு செய்வதில்லை. கடன்மறுசீரமைப்பு ஊடாக நிதிஸ்திரத்தன்மையை ஏற்படுத்திக்கொள்வதே எமது எதிர்பார்ப்பாகும் - என்றார்.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி பீற்றர் புரூவர் அங்கு தெரிவித்ததாவது:

கடன்மறுசீரமைப்பும், அதற்கான இணக்கபாடுகளும் உள்நாட்டு விவகாரமாகும். அதில் நாம் தலையீடுகளைச் செய்யப்போவதில்லை. உள்நாட்டு, வெளிநாட்டு கடன்கள் எவ்வாறு மறுசீரமைக்கப்படும் என்பது தொடர்பில் எமக்கு தனியானதொரு நிலைப்பாடு இல்லை. இலங்கையின், நிதிக்கட்டமைப்பு புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதே எமது இலக்காகும்.

தற்போதைய கலந்துரையாடல்களில் இலங்கையின் நிதிஸ்திரத்தன்மை தொடர்பில் தான் ஆராயப்பட்டது. ஆகவே உள்நாட்டுக் கடன்களை எவ்வாறு மறுசீரமைப்பது, அதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கப்போவது யார் என்பது பற்றி நாமும் அவதானித்துக் கொண்டிருக்கின்றோம் - என்றார்.

## சாவடைந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரிடம், மாணவியின் நண்பியின் காதலன் 20 ஆயிரம் ரூபா பணம் கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதான சந்தேகநபரும் மாணவியைச் சந்திப்பதற்கு, முற்பணமாக 12 ஆயிரம் ரூபாவை மாணவியின் நண்பியின் காதலனிடம் கொடுத்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த பிரதான சந்தேகநபரின் சாரதியாகச் செயற்பட்டவர், மாணவியின் நண்பி மற்றும் நண்பியின் காதலன் ஆகியோர் மே 26 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட சந்தேகநபர்கள் நால்வரிடமும் வாக்குமூலங்களைப் பதிவு செய்யக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த விடுதி உரிமையாளரின் மனைவி இன்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (02)


## கோட்டாபய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இதன் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். ஜனநாயகம், சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையை மாத் திரம் ஜனாதிபதியிடம் முன்வைத்தோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலத்துக்குள் நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வந்துள்ளார். நாடாளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் புதிய நிலையான அமைச்சரவையில் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களை இணைத் துக் கொள்ளுமாறு வலியுறுத்தினோம்.

நிலையான அமைச்சரவை நியமனம், பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு முன்னுரிமை தொடர்பில் ஜனாதிபதியிடம் முன்வைத்த கோரிக்கைக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை. அமைச்சு பதவி வழங்குமாறு ஜனாதிபதியிடம் தொடர்ந்து நாங்கள் வலியுறுத்தவில்லை. ஜனாதிபதியின் அதிகாரத்தை சவாலுக்குட்படுத்தப் போவதில்லை - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622






காலைக்கதிர்
Kalaikkathir

# மே 22 ஆம் திகதி புதிய கட்சியை ஆரம்பிக்கின்றார் சம்பிக்க ரணவக்க!



நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க குடியரசு முன்னணி என்ற தனது புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மே22ஆம்திகதிசம்பிக்க ரணவக்க புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளார்.இலங்கை குடி யரசாகி மே 22 ஆம் திகதியுடன் 51 வருடங்கள் பூர்த்தியாகின்றமை குறிப்பிடத்தக்கது.

தேசிய அபிலாசைகளை கொண்டுள்ளார் என கருதப்படும் சம்பிக்க ரணவக்க சமீபத்தில் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியிலிருந்து வெளியேறினார். எனினும் அவர் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராகவே தொடர்ந்தும் செயற்படு கின்றார்.

சம்பிக்கரணவக்க தேசியவாதகொள்கைகளை கொண்ட ஜாதிஹ ஹெல உறுமய கட்சிக்கு தலைமை தாங்குகின்றார்.


2015 முதல் 2019 ஆம் ஆண்டுவரையானகாலப்பகுதியில்நல்லாட்சிஅரசாங்கத்தில் இடம் பெற்றிருந்தது முதல் சில லிபரல் மற்றும் முற்போக்கு கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும்போக்கை அவர் வெளிப்படுத்தி வருகின்றார். 2022 அல் அவர் 43 ஆவது பிரிகேட்டை ஆரம்பித்தார்.இது அவரது புதிய கொள்கைகளை வெளிப்படுத்துகின்றது.

தனது முன்னையை சகாவான மஹிந்தராஜபக்ஷ குடும்பத்தினரை சம்பிக்கரணவக்க கடுமையாக விமர்சிக்கின்றார். இரண்டு முறை ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவிற்கு சம்பிக்க ரணவக்க ஆதரவளித்திருந்தார்.

புதிய கட்சிக்கான தெளிவான தேவை உள்ளது எனத் தெரிவித்துள்ள சம்பிக்க ரணவக்க நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது நாட்டின் தற்போதுள்ள கட்சிகளும் அமைப்புமுறைகளும் அந்த நிலையை அடைந்துள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தாய்லாந்தில் இடம் பெற்றுள்ள தேர்தலில் புதிய இளம் கட்சி அதிக வாக்குகளை பெற்றுள்ளது பாரம்பரியகட்சிகள் முற்றாகதோற்கடிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளசம்பிக்கரணவக்க இலங்கையிலும் இது இடம்பெறுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## பிரபல வைத்தியர் சிவகுமாரன் மரணம்



பிரபல வைத்தியரான வைத்தியர் சிவகுமாரன் உயிரிழந்துள்ளார்.

அவரது உயிரிழப்புக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இரங்கல்செய்தியில்அவர் குறிப்பிடுகையில் -

யாழ். போதனா வைத்தியசாலையில் சிக்கலான காலப் பகுதியில் சிறப்பாக கடமையாற்றிய வைத்திய நிபுணர் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கல்கள்.

மறைந்த வைத்தியர் சிவகுமாரன் அவர்கள் பல தலைசிறந்த வைத்தியர்களை உருவாக்கியவர். மருத்துவபீட மாணவர்களால் 'கடவுள்' என செல்லமாக அழைக்கப்பட்டவர்.

கடமை, ஒழுக்கம், நோயாளி முதன்மையானவர் என பல சீரிய பண்புகளை கற்பித்தவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஹோட்டலின் இரண்டாவது மாடியில் இருந்து தவறி விழுந்த குழந்தை!

அஹுங்கல்லையில் அமைந்துள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியிருந்த குழந்தையொன்று ஹோட்டலின் இரண்டாவது மாடியில் இருந்து தவறி விழுந்துள்ளது. இந்த சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை பதிவாகியுள்ளது.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த 4 பேர் கொண்ட குடும்ப உறுப்பினர்கள் விடுமுறையை கழிப்பதற்காக குறித்த விடுதிக்கு சென்ற போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மேலும் நான்கு வயது குழந்தையே இவ்வாறு தவறி விழுந்து படுகாயமடைந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இவ்வாறு விழுந்ததில் படுகாயமடைந்த குழந்தை பலப்பிட்டிய ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக காலி கராபிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

விடுதியின் இரண்டாவது மாடியில் உள்ள அறையில் தனது தந்தை மற்றும் சகோதரருடன் உறங்கிக் கொண்டிருந்த குழந்தை, அறையை விட்டு வெளியே வந்து மண்டபத்தில் நடந்து சென்றபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

## இறுதிக்கட்ட புனரமைப்புப் பணிகளில் நல்லூர் சங்கிலியன் தோரண வாயில்!



யாழ்ப்பாணம், மே 16

நல்லூர் சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்புப் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், அண்மையில் நீர் விசிறி தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை எடுத்தியம்பும் வகையில் நல்லூரில் உள்ள சங்கிலியன் தோரண வாயிலானது யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தால் புனரமைக்கப்பட்டு வருகிறது.

அத்துடன், மரபுரிமைச் சின்னங்கள் அழிந்து போகாமல், அவற்றைப் பாது காத்து, எமது எதிர்கால சந்ததியினருக்கு அந்தச் சின்னங்களை ஒப்படைக்கவேண்டிய தார்மீகக் கடமையுணர்வோடு யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தால் முன்னெடுக்கப்படும் முதலாவது செயற்றிட்டம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரபல போதை வியாபாரி ஏறாவூரில் வைத்து கைது!

மட்டக்களப்பு ஏறாவூரில் ஓட்ஹிடா ஒன்றில் ஐஸ்போதைப் பொருளை வியாபாரத்துக்காக எடுத்து கடத்திச் சென்ற பிரபல போதைப்பொருள் வியாபாரி ஒருவரை ஞாயிற்றுக்கிழமை 5 கிராம் ஐஸ்போதை பொருளுடன் கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய ஏறாவூர் பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிசார் சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியவில் நீதிமன்ற வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஓட்டோ ஒன்றில் ஐஸ்போதை பொருளை வியாபாரத்துக்காக கடத்திச் சென்ற ஓட்டோவை நிறுத்தி சோதனையிட்டபோது அதில் 5 கிராம் ஐஸ்போதை பொருளுடன் பிரபல வியாபாரி ஒருவரை கைது செய்ததுடன் ஓட்டோ ஒன்றை மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் நீண்ட காலமாக போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவருபவர் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

## மலையகத்தில் மாணவர்களுக்கு மானியம் வழங்குவதாக மோசடி?

நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் மோசடிகள் அதிகரித்து வருகின்றன. அப்பாவி மக்களைக் குறிவைத்து தனிப்பட்ட சிலரும், குழுக்களும் இத்தகைய மோசடிகளில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

அநேகமாக பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களை மையமாக வைத்தே இத்தகைய மாசடிகள் இடம்பெறுகின்றன என சுட்டிக்காட்டப்படுகிறது.

அந்த வகையில், குறித்த நிறுவனம் ஒன்றின் பெயரில், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளின் கல்வியை ஆதரிக்க மானிய திட்டம் என்று கூறி விண்ணப்ப படிவம் ஒன்று மலையக தோட்ட பகுதி மக்கள் மத்தியில் விநியோகிக்கப் பட்டு வருவதாகவும், விண்ணப்பத்தை பூர்த்தி செய்து மீள ஒப்படைக்கும் போது விண்ணப்ப படிவத்துடன் ரூபா 400 அறவிடப் படுவதாகவும் குறித்த பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

பண்டாரவளை மற்றும் நுவரேலியா பிரதேச தோட்ட பகுதிகளில் இத்தகைய விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக கூறும் மக்கள், இது தொடர்பில் தமக்கு போதிய விளக்கம் அளிக்கப்படவில்லை என்றும் மேலும், உண்மையிலேயே குறித்த நிறுவனம் மானியத்தொகை வழங்குவதால் எதற்காக விண்ணப்பப் படிவத்துடன் பணம் அறவிட வேண்டும் என்றும் கேள்வி எழுப்புகின்றனர்.

மேலும், இது ஒரு தொண்டு நிறுவனமாக இருப்பின் அது, இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமா எனவும், கேள்வி எழுப்புகின்றனர். எனவே, இதன் உண்மைத்தன்மை தொடர்பாக மக்களுக்கு பூரண விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் கோருகின்றனர்.

## மஹிந்த பிரதமராகின்றமையில் எந்த பிரச்சினையும் கிடையாது!

### மனோ கணேசன் இப்படிக் கருத்து



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நிய மிப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், நாடாளுமன்றத்தைக் கலைத்து விரைவில் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியைக் கோருவதாக நாட்டில் பெரும் பரபரப்பு நிலவு கின்ற நிலையில் அவரைப் பிரதமராக நியமிப்பதில் தங்களுக்கு எந்த பிரச்சினையும் கிடையாது எனக் கூறியுள்ளார்.

ஆனால் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துங்கள் என்றும் அதற்கான அரசாங்கத்தை அமைக்க தாம் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் மூலமே மக்களின் ஆணை யாருக்கு உள்ளது என்பதைக் கண்டறிய முடியும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## நடராஜர் சிலையை திருடிய இராணுவ சிப்பாய் கைது

வவுனியா ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள ஆலயமொன்றில் இருந்து பித்தளை நடராஜர் சிலையை திருடியதாக சந்தேகத்தின் பேரில் இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கராயன்குளத்திலுள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ வீரர் மாதாந்த விடுமுறையை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய போதே இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர் கோவிலில் உள்ள விக்கிரகத்தை திருடி விற்பனைக்காக பையில் வைத்துக்கொண்டிருந்த போது ஓட்டோ சாரதிகள் குழுவால் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து திருடப்பட்ட 50 ஆயிரத்து ரூபா பெறுமதியான சிலை யும் சந்தேகநபரும் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





## யாழ். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இரும்பு திருட்டு

### 8 பேர் கைது

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இரும்பை திருடிய தொழிற்சாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மூவர் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொழிற்சாலையில் இருந்து சுமார் ஒரு தொன் திருடப்பட்டஇரும்பைலொறியில் ஏற்றிச் சென்ற வேளையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட ஐந்து பேரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, தொழிற்சாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் இணைந்து இந்த திருட்டைச் செய்தமைதெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து காங்கசன்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மூன்று பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அனைவரும் நேற்று நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தீர்வு திரிசங்கு சொர்க்கத்தில்

பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது போலவே அரசுத் தலைவருக்கும் வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான பேச்சு எந்த உருப்படியான முன்னேற்றமும் இன்றி முடிவடைந்துள்ளது. இந்தியாவுக்கும் பன்னாட்டுச் சமூகத்திற்கும் தான் தீர்வு தொடர்பில் ஒரு செயற்பாட்டில் [புரோசசஸ்] இருக்கிறார் என்று காட்டுவதற்காக ரணில் விக்கிரமசிங்க இந்தப் பேச்சை மீண்டும் தொடக்கியிருக்கின்றாரே தவிர தீர்வு காண்பதற்கான எந்தவொரு உண்மையான நோக்கமும் அவரிடம் இல்லை.

2023 மாசி 4 இலங்கையின் சுதந்திர தினத்திற்கு முன்னதாக அரசியல் தீர்வைக் காண்பேன் என்று சூளுரைத்தவர் ரணில் விக்கிரமசிங்க. அப்போதே, இந்த மாதிரி ஒரே இரவில் உங்களால் ஒன்றும் பெரிதாகச் சாதித்துவிட முடியாது என்பது எங்களுக்குத் தெரியும், எனவே குறைந்தபட்சம் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி மக்களின் நம்பிக்கையை முதலில் சம்பாதியுங்கள், அதன் பின்னர் ஒரு கால அட்டவணையில் தீர்வைக் காணலாம் என்று தமிழ் அரசுக் கட்சி [அப்போதைய கூட்டமைப்பு] தெரிவித்தது.

உடனே அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நான் முழுமையாக நடைமுறைப்படுத்துவேன், இல்லையேல் யாராவது நாடாளுமன்றத்தின் மூலம் அதனை இல்லாமலாக்குங்கள் என்று வீராவேசமா முழக்கமிட்டார். அதற்குப் பிக்குகள் பொங்கி எழுந்து அரசமைப்பின் பிரதிகளை எரித்து எதிர்ப்புக் காட்டியதன் பின்னர் மெல்லத் தன் வாலைச் சுருட்டி வைத்துக்கொண்ட அவர், இப்போது அதே 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த என்ன செய்யவேண்டும் என்றும் அதை எப்படிச் செய்வது என்றும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் இணைந்து இரகசியமாக ஒரு ஆவணத்தைத் தயாரித்துவிட்டு அதனை மற்றவர்களையும் ஏற்கச் செய்வதற்காகவே இந்தத் தடவை பேச்சு என்கிற நாடகத்தை அரங்கேற்றினார்.

இதிலும் ரணிலின் நெஞ்சழுத்தம் என்னவென்றால், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் பேசப்பட்டபோது, தென்னாபிரிக்காவில் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காணப்பட்ட பின்னரே இதுபோன்றதொரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது, இங்கு பிரச்சினையே தீர்க்கப்படாத நிலையில் இதுபோன்ற குழுக்கள் தேவையில்லை என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியபோது, நாளை பேசித் தீர்வு கண்டுவிடுவோம் அதன் பிறகுதானே ஆணைக்குழு அமைக்கப்படும் என்றுவேறு தெரிவித்திருக்கிறார்.

ஆனால், அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேசுவாதாக அறிவிக்கப்பட்ட இரண்டாவது நாள் பேச்சில் அது பற்றிய எந்த விரிவாக கலந்துரையாடல்களும் நடத்தப்படவில்லை. பதிலாக இந்தியாவைத் திருப்திப்படுத்திக் காலத்தை இழுத்தடிக்கக்கூடிய வகையில், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதைப் பற்றி ஆராய்வதற்கான குழு ஒன்றை நியமிப்பதற்குத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்மதத்தைப் பெறுவதற்கே முயற்சிக்கப்பட்டுள்ளது. நல்லவேளையாக அதற்கு இணங்க விக்னேஸ்வரனையும் அரசதரப்புப் பிரதிநிதிகளையும் தவிர மற்றைய உறுப்பினர்கள் மறுத்துவிட்டார்கள்.

மறுத்துவிட்டு என்ன செய்யப் போகிறார்கள் என்றால், அதற்குப் பதில்லைத்தான் என்றாலும் நியாயமன்ற வகையில் ரணில் எப்போதும் தன்னையும் தவறிழைத்த அரசையும் பிணை எடுக்க தமிழர்களைப் பயன்படுத்துவதற்கும் அனுமதித்துக்கொண்டே இருக்கவும் முடியாது என்பதையும் ஏற்றுத்தானாகவேண்டும். தமிழர்களின் தீர்வு தொடர்ந்தும் திரிசங்கு சொர்க்கத்திலேயே தத்தளிக்கப் போகின்றது என்பதுதான் உறுதியாகத் தெரிகின்றது.

## மேல் மாகாண நகர அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை உப குழு!

### ஜனாதிபதி ரணில் ஏற்பாடு



மேல்மாகாண அபிவிருத்தி தொடர்பான சுபானா ஜுரோங் திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிப்பதாகவும், அந்த அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்த புதிய நிறுவனமொன்றை ஸ்தாபிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு சுமார் 50 சதவீத பங்களிப்பை வழங்கும் மேல் மாகாணத்தை முறையான நகர அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக விரிவான அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்திய ஜனாதிபதி, முறைசாரா நகர அபிவிருத்தி, பிற்காலத்தில் கட்டுப்படுத்த முடியாத நிலைமையாக மாறும் எனவும் சுட்டிக்காட்டினார்.

மேல்மாகாண நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாட லின்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்துக்கான அபிவிருத்தித் திட்டத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மேல்மாகாண அபிவிருத்தி தொடர்பான முதலாவது திட்டத்தை, 1997ஆம் ஆண்டு அமைச்சர் இந்திக குணவர்தன முன்வைத்ததை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அதன் பின்னர் சிங்கப்பூரின் சுபானா ஜுரோங் நிறுவனம் 2004ஆம் ஆண்டு முன்வைத்த திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்தார்.

அதன்பின்னர் 2015ஆம் ஆண்டுக்கு பின்னர் அந்த நிறுவனத்தினால் குறித்த திட்டம் மீண்டும் மறுசீரமைத்துவழங்கப்பட்டதுடன், இத்திட்டம் தொடர்பில் அனைவருடனும் கலந்துரையாடி, தேவைப்பட்டால் கூடுதல் மறுசீரமைப்புகளுடன் மேல் மாகாணத்துக்கு தேவையான அடிப்படை அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் உடனடித் தீர்மானங்களை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், நகர அபிவிருத்தி அதிகார சபை யின் ஊடாக மேல் மாகாணத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதான அபிவிருத்தித் திட்டமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இங்கு கையளிக்கப்பட்டது.

இந்த அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு அவசியமான காணிவிடுவிப்பு மற்றும் காணி சுவீகரிப்பு தொடர்பிலும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது. அந்தப் பணிகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, பிரசன்ன ரணதுங்க, பந்துல குணவர்தன, விஜயதாச ராஜபக்ஷ, நளின் பெர்னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உட்பட அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் சனத் நிஷாந்தவின் பிறந்ததினம் கொழும்பு ஹோட்டல் ஒன்றில் கோலாகலம்!







நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவிற்கு கொழும்பில் உள்ள முன்னணி விருந்தகம் ஒன்றில் பிரமாண்டமான பிறந்த நாள்விழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் அலரிமாளிகைக்கு வெளியிலும் காலி முகத்திடலிலும் முகாமிட்டிருந்த அமைதியான போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலை வழிநடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டவர்களில் நிஷாந்தவும் ஒருவராவார்.

இந்த நிலையில் பல சமூக ஊடக பயனர்கள் இராஜாங்க அமைச்சரின் பிறந்த நாள் விழா தொடர்பில் தமது கடுந்தொனி கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

எனினும் அதற்கு பதிலளித்துள்ள சனத் நிாந்த, தனது பிறந்தநாள் உண்மையில் மே 3 அன்று என்றும், இந்த மாதத்துக்கான நாடாளுமன்றம் மே 9 அன்று கூடியதால், அன்றைய தினம் விழா ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை விருந்தொன்றை நடத்த வேண்டும் என்று முயற்சியை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தடுத்தார் எனக் குறிப்பிட்டுள்ள சனத் நிாந்த, காலி முகத்திடல் தாக்குதலைத் தொடர்ந்து கொல்லப்பட்ட ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் ஓராண்டு நினைவு தினம் அனுஷ் டிக்கப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டினார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## மலையக பாடசாலை மாணவர்களுக்காக 1000 மெட்ரிக் தொன் அரிசி கிடைத்தது

### தாய்வான் வழங்கி வைப்பு



மலையக பகுதிகளில் உள்ள ரைப் 3 ஆரம்பக் கல்வி பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்குவதற்கான திட்டத்தை முன்னெடுப்பதற்காக 1,000 மெட்ரிக் தொன் அரிசி தாய்வான் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் இந்திய தூதரக பணிப்பாளர் நாயகம் ஊடாக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) உத்தியோகபூர்வமாக பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் கடந்த மார்ச் 17 ஆம் திகதி கைச்சாத் திடப்பட்டிருந்தது. அரச சார்பற்ற நிறுவனமான - குட் நெய்பர்ஸ் இன்டர் நேஷனல் - இந்தத் திட்டத்துக்கான பங்களிப்பை வழங்கியுள்ளது.

வழங்கப்பட்டுள்ள அரிசி, மலையகத்தில் தெரிவுசெய்யப்பட்ட ரைப் 3 ஆரம்ப பிரிவு பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளது.

புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, மாணவர்களின் இடைவிலகளை தடுப்பதற்காகவும், அவர் களை ஊக்குவிக்கும் நோக்கு டனே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அமைச்சர் உட்பட நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராமேவரன், தாய்வான் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் இந்திய தூதரக பணிப்பாளர் நாயகம் ரிச்சட் சீ.எல். சென், பிரதி பணிப்பாளர் நாயகம் சூ - ஹெசீன் செங், 'குட் நெய்பர்ஸ் இன்டர் நேஷனல்' தாய்வான் நிறுவனத்தின் செயலாளர் நாயகம் கோ ஜெங் யாங் மற்றும் அதிகாரிகள், அமைச்சின் செயலாளர் எஸ்.சமரதிவாகர, அமைச்சின் அதிகாரிகள், புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய பணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

# பல்கலை பேராசிரியர் என்பவர் யார்? மானியங்கள் ஆணைக்குழு விளக்கம்!

தகுதியில்லாதவர்கள் தம்மை பேராசிரியர்களாக காட்டிக்கொள்கின்ற நிலையில் பேராசிரியர் என்பவர் யார் என்பதை பல்கலைக்கழகமானியங்கள்ஆணைக்குழு தெளிவுப்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழக மானியக் குழு, நாடாளுமன்ற பொது நிறுவனங்களுக்கான குழுவால் அழைக்கப்பட்டபோது, இந்த விடயம் பேசப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியராக இருந்த கோப் தலைவரான ரஞ்சித் பண்டார, மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்கவிடம், சிலர் தங்களைப் பேராசிரியர்கள் என்று கூறுகின்றனர். உண்மையில் யாரை பேராசிரியர் என்று கூறிக்கொள்ளமுடியும்என்றுவினவியுள்ளார்.

இதற்கு பதிலளித்த பேராசிரியர் அமரதுங்க, பேராசிரியர் என்பது ஒரு பதவி என்றும், பல்கலைக்கழகத்தில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு அல்லது பதவி விலகல் செய்த பிறகு அனைவரும் அதைப் பயன்படுத்த முடியாது என்றும் குறிப்பிட்டார்.

எனினும் ஒருவர், பணி ஓய்வுக்குப் பின்னரும் தம்மை பேராசிரியர் என்று கூறிக் கொள்வதற்கு சில அளவுகோல்களைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்பதற்கான சுற்றறிக்கையை மானிய ஆணைக்குழு வெளியிட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

ஒரு பல்கலைக்கழகத்தின் செனட், கல்வித்துறைக்கான குறித்த ஒருவரின் சேவையை ஆய்வு செய்த பிறகு, அவருக்கு எமரிட்டஸ்பேராசிரியர்(வாழ்நாள்) பதவியை வழங்குவதற்கான கோரிக்கையை அங்கீகரிக்க வேண்டும், இது அவர்களை வாழ்நாள் முழுவதும் பேராசிரியராகக் குறிப்பிடும் உரிமையை அளிக்கிறது.

அந்த கௌரவம் ஒரு சிலருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்று பேராசிரியர் அமரதுங்க குறிப்பிட்டார்.

இதன்படி வாழ்நாள் பேராசிரியர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல் பீரிஷ் மற்றும் கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார ஆகியோரை அழைக்க முடியும் என்று பேராசிரியர் அமரதுங்க தெரிவித்தார்.

இதனையடுத்து சில கல்விப் பட்டங்களை யார் வைத்திருக்கலாம் என்பதை விவரிக்கும் நடைமுறை விதியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிமுகப்படுத்த வேண்டும் என்று கோப் குழு பரிந்துரைத்துள்ளது.

# படையினரைக் குவித்து மிக இரகசியமாக மகிந்தவை பிரதமராக்க அவசியமில்லை

## மொட்டுக் கட்சி செயலர் கூறுகின்றார்

மக்களுக்காக அதிகாரத்தை துறக்கவும், மக்களுக்காக அதிகரத்தை ஏற்றுக்கொள்ளவும் தயாராகஇருக்கும் மஹிந்த ராஜபக்சவை இரகசியமாக படைகளைக் குவித்து மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டுவரவேண்டிய எந்தவொரு அவசியமும் கிடையாதுஎன்றுபொதுஜனபெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பில் படைகள் குவிக்கப்பட்டு, பொலிஸார் குவிக்கப்பட்டு இரகசியமாக மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கப் போவதாகப் பரப்புரை செய்யப்படுகின்றது.

இந்தப் பரப்புரை எந்த விதமான அடிப்படை ஆதாரங்களும் அற்றதாகும். அரசியல் ரீதியாக வங்குரோத்து அடைந்துள்ள அர சியல் தரப்பினரே மீண்டும் ஊடக வெளிச்சத்தை அடைவதற்காக இவ்வாறான பொய்ப் பரப்புரைகளை மேற் கொண்டு வருகின்றார்கள்.

மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டில் நான்கு ஜனாதிபதிகளால் முடிவுக்கு கொண்டு வர முடியாத உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டுவந்தவர். தெற்கில் சீல் வைத்த சவப்பெட்டிகள் வருவதை நிறுத்தியவர். வடக்கில் மாணவர்கள் சயனைட் அணிந்து பாடசாலை செல்வதை தவிர்த்து ஆயுதம் ஏந்தியதை நிறுத்தி அவர்களை கல்வியில் மேம்படச் செய்த வர். அவ்விதமான அபிமானம் மிக்க தலைவரை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்கு படைகளை, பொலிஸாரை குவித்து அரசியல்சூழ்ச்சிசெய்துஇரகசியமாக கொண்டு வர வேண்டிய எந்தவொருதேவையும்இல்லை.



அந்த தலைவர் மக் களுக்காக அதிகாரத்தை துறக்கவும், மக்களுக்காக அதிகாரத்தினை ஏற்றுக்கொள்ளவும் எப்போதுமே தயாராக இருக்கும் ஒருவர். ஆகவே அரசியல் இலாபத்துக்காக பொய்யான பரப்புரைகளை பொதுமக்கள் நம்பி விடவேண்டாம் - என்றார் (02)




# நுரைச்சோலை மின் உற்பத்தி செயற்பாடுகள் இடைநிறுத்தம்!

## காஞ்சன விஜயசேகர தகவல்

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி கட்டமைப்பை 100 நாள்களுக்கு செயலிழக்கச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் கட்டமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்காகவே இந்தத் தீர்மானத்தை எட்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்

இதன்படி எதிர்வரும் மூன்றாம் திகதி முதல் 100 நாள்களுக்கு இந்த கட்டமைப்பு செயலிழக்க செய்யப்படவுள்ளது.

மேலும் குறித்த காலப்பகுதியில் நாட்டில் மின்சார தடையை ஏற்படுத்தாது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சுவிட்ஸர்லாந்தின் ஓட்டப் பந்தயத்தில் அசத்திய 60 வயது இலங்கை தமிழன்!


கிராண்ட் பிரிக்ஸ்வான் பெர்ன் ஊடாக சுவிட்ஸர்லாந்தில் ஓட்டப்பந்தய போட்டி நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஓட்டப்பந்தய போட்டியில் 3 வயது தொடக்கம் 92 வயதுக்குட்பட்டவர்கள் கலந்துகொண்டுள்ளதுடன், 92 வயதுடைய ஒருவர் போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்றுள்ளார்.

இந்த போட்டியில் இலங்கையை சேர்ந்த 60 வயதுடைய முருகவேல் பொன்னம்பலம் என்பவர் கலந்துகொண்டு பதக்கம் வென்றுள்ளார்.

இவர் கிளிநொச்சி - பூநகரி பகுதியை பூர்வீகமாக கொண்ட தமிழர் ஆவார்.

249 பேர் பங்குபற்றிய இந்த ஓட்டப் போட்டியில் முருகவேல் பொன்



னம்பலம், 124 ஆவது இடத்தை பெற்றுக் கொண்டுள்ளதுடன் 4.7 கிலோ மீற்றர் தூரத்தை 30 நிமிடங்கள் 15 செக்கனில் ஓடி முடித்துள்ளார்.

இந்த வயதில் ஓட்டப்போட்டியில் உற்சாகமாகக் கலந்துகொண்டு பதக்கம் பெற்ற முருகவேல் பொன்னம்பலத்தை பலரும் பாராட்டியுள்ளதுடன் அவர் போட்டியில் பங்குபற்றிய காணொளி தற்போது வெளியாகியுள்ளது.

## ஈஸ்டர் குண்டுவெடிப்பு தொடர்பில்

# தொழிலதிபரின் ஆட்சேபனையை நிராகரித்தது உயர் நீதிமன்றம்

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படும் என்ற தகவலை மறைத்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள தொழிலதிபர் மொஹமட் இப்ராஹிம் மற்றும் அவரது இரு மகன்களுக்கு எதிராக சட்ட மா அதிபர் தாக்கல் செய்த வழக்கை விசாரிக்க முடியாது என முன்வைக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனையை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்ட குற்றப்பத்திரிகை சட்டபூர்வமாக செல்லுபடியாகாது எனத் தெரிவித்த குற்றஞ் சாட்டப்பட்ட தரப்பினர், பூர்வாங்க ஆட்சேபனையை சமர்ப்பித்துள்ளனர்.

இதன் காரணமாக, அதனை நிராகரித்து குற்றவாளிகளை விடுவிக்குமாறு ஆட்சேபனைகள் நீதிமன்றத்தில் கோரப்பட்டிருந்தன.

இது தொடர்பில் இன்று (திங்கட்கிழமை) தீர்ப்பை வழங்கிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்ட குற்றப்பத்திரிகையின் செல்லுபடியாகும் தன்மையை ஆராய தமது நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை எனவும் எனவே ஆரம்ப ஆட்சேபனையை நிராகரிப்பதாகவும் தெரிவித்தார்.

இதயைடுத்து வழக்கின் முன் விசாரணை மாநாடு ஜூன் 6 ஆம் திகதி இடம்பெறும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# கடலில் மூழ்கி காணாமற் போன மாணவனின் சடலம் கண்டெடுப்பு!



மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு பகுதியில் கடலில் மூழ்கி காணாமல்போன மாணவனின் சடலம் நேற்று (திங்கட்கிழமை) காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது,

இம்முறை சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை மாலை பெரியகல்லாறு கடலில் குளிக்கச்சென்ற நிலையில் காணாமல்போயிருந்தார்.

பெரியகல்லாறு,பொற்கொல்லர் வீதியை சேர்ந்த பாலச்சந்திரன் ஜெசான் என்னும் 17வயதுடைய மாணவரே இவ்வாறு காணாமல்போயிருந்தார்.

மூன்று பேர் கடலுக்கு குளிக்கச் சென்ற நிலையில் குறித்த மாணவன் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில்நேற்றுகாலைகுறித்த மாணவனின் சடலம் கரையொதுங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிகுடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மாடுகளை திருடுவோர் புகைப்படங்கள் சமூகவலைத் தளங்களில் வெளியாகும்

## விவசாய அமைச்சு அதிரடி

கறவைமாடுகளைதிருடும்நபர்களை கைது செய்து அவர்களின் புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நாள்களில் மாடு திருட்டுகள் அதிகரித்து வருவதாக விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளால் முறைப்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் அமைச்சர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாளொன்றுக்கு சுமார் 20 லீற்றர் பால் வழங்கும் கறவை மாடுகள் திருடப்படுகின்றன எனவும், வாரத்திற்கு சுமார் 35 மாடுகள் ஒரு மாவட்டத்தில் இருந்து திருடப்படுகின்றன எனவும் விவசாய அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதன்படி, கறவை மாடுகளைத் திருடி கைது செய்யப்படும் நபர்களின் புகைப்படங்களை சமூக வலைத்தளங்கள் ஊடாக வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரிடம் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 01 திங்கட்கிழமை 15.05.2023 கதிர் 59


## மோ. சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் இறப்பு

### வவுனியாவில் பரிதாபம்

வவுனியா – மன்னார் வீதியில் வேப்பங்குளம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் இருந்து வவுனியா நகரைநோக்கிச்சென்றமோட்டார் சைக்கிள்வேப்பங்குளம்பகுதியில் பயணித்தபோதுநாய்ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகி, அருகில் இருந்த பாலத்துடன் மோதியுள்ளது.

இந்த விபத்தில் மகாறம்பைக்குளம் பகுதியைச்சேர்ந்த தனுஜன் (வயது 20) என்ற இளைஞரே சம்பவ 2



## சதி செய்து பிரதமர் பதவியை பெற மஹிந்த தயாரேயில்லை

### நாமல் இப்படித் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச சதித் திட்டங்களூடாகப் பிரதமர் பதவியைப் பெறுவதற்குத் தயாராகவில்லை. மக்கள் ஆணையின்படி, அவர் மீண்டும் பிரதமர் பதவியைப் பெறுவதற்குத் தயாராக வுள்ளார்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்சதெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: அண்மைய நாட்களில் எமது தொலைபேசிக்கு தொடர்ச்சியாக அழைப்புக்கள் வந்தன. அந்த அழைப்புக்களில் எல்லாம் கொழும்பில் ஆயிரக்கணக்கான பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளார்கள். மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியை ஏற்கப்போகின்றாரா என்ற கேள்விகளையே தொடுத்திருந்தன.

உண்மையில், மஹிந்த ராஜபக்ச மக்களுக்காகவே பதவியிலிருந்து இராஜினாமச் செய்தார். ஆகவே அவர் நாட்டின் தலைமையை மீண்டும் ஏற்பதென்றால் அது மக்கள் ஆணையின் அடிப்படையிலேயே அமையும். மாறாகச் சூழ்ச்சிகளின் அடிப்படையில் எந்தவொரு பதவியையும் அவர் ஏற்கப்போவதில்லை.

அதேநேரம், அவர் தலைமைத்துவத்தினை ஏற்பதாக இருந்தால் ஆயிரக்கணக்கான பொலிஸாரையும், பாடையினரையும் வருவிக்க வேண்டியதில்லை.

அரகலய போராட்டம் செய்தவர்கள் மஹிந்தவையும், 2

# வடக்கு, கிழக்கு ஆளுநர்கள் உட்பட 3 பேர் பதவி நீக்கம்

## ஜனாதிபதி ரணில் அதிரடி



வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் ஆளுநர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இன்று அதிரடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் மற்றும் வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் ஒ∴ப் த ∴ப்லீட் வசந்த கரன்னாகொட ஆகியோரே ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அதற்கமைய மூன்று மாகாணங்களுக்குமான புதிய ஆளுநர்கள் எதிர்வரும் புதன் கிழமை நியமிக்கப்படவுள்ளனர் என்றும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி மூன்று ஆளுநர்களும் கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நியமிக்கப்பட்டிருந்தனர். மூவருக்கும் எதிராக அந்தந்த மாகாண மக்கள் பிரதிநிதிகளால் தொடர்ந்தும் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (02)

### கண்ணிவெடி அகற்றும் பணியின்போது பயங்கரம்

## மணலாற்றில் பெண் மீது பாலியல் வன்கொடுமை

### காயங்களுடன் முல்லை வைத்தியசாலையில் சேர்ப்பிப்பு

(ந.லோகதயாளன்)

கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் நிறுவனத்தில் பணியாற்றும் பெண் ஒருவர் முல்லைத்தீவு மாவட்டம் மணலாறு பகுதியில் தனது பணியில் ஈடுபட்டிருந்தபோது இருவர் அவரை பாலியல் கொடுமைக்கு உட்படுத்தியுள்ளனர் என்றுபொலிஸார்தெரிவித்தனர். ஹலோ ட்ரஸ்ட்நிறுவனத்தில்பணியாற்றும்அந்தப் பெண்படுகாயமடைந்தநிலையில்இன்று காலை 9 மணியளவில் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

வெலிஓயாபடையினரின்சோதனைச் சாவடியிலிருந்து சில நூறு மீற்றர்கள் தூரத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் எந்தவித உத்தியோகபூர்வ அறிக்கைகளையும் விடுக்கவில்லை.

கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பெண்ணை அருகே இருந்த காட்டுக்குள் இருந்து வந்த இருவர் வாயைப் பொத்தி காட்டுக்குள் இழுத்துச் சென்றுள்ளனர். அவர்களிடம் இருந்து தப்பி காட்டிலிருந்து அந்தப் பெண் வெளியே ஓடி வந்து விழுந்த பின்னரே ஏனைய பணியாளர்களை அவரைக் கண்டு உதவி செய்து உடனடியாகத் தமது வாகனத்தில் ஏற்று வைத்தியசாலைக்கு எடுத்து விரைந்தனர்.

பெண் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டாரா என்பது தொடர்பில் இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது. அவரது உடலில் காயங்கள் காணப்படுகின்றன. அவர் உளவியல் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உடனடியாக மனநல சிகிச்சை தேவைப்படுவதால் அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தனக்கு நடந்தவைகள் குறித்துப் பேசக்கூடிய உடல் நிலையிலோ மனநிலையிலோ அவர் இல்லாதபடியால் அவருக்கு நடந்தவைகள் குறித்து உடனடியாக உறுதியான தகவல்கள் எதனையும் தெரிவிக்க முடியாது. இவ்வாறு முல்லைத்தீவு வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

## கிராம மட்டத்திலிருந்தே ஊழல்வாதிகளை மக்கள் நிராகரிக்கத் தொடங்க வேண்டும்

### சரத் பொன்சேகா அழைப்பு



ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களைஉடையஅரசியல்வாதிகளை நிராகரிக்கும் செயற்பாடுகளை கிராம மட்டத்திலிருந்து பொதுமக்களே தொடங்கவேண்டுமென சரத்பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டுஉரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். நாடு முன்னேற வேண்டும்என்பதே அனைவரினதும் இலக்காகஇருந்தால், அதுபொதுமக்கள் மத்தியிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும்.

ஊழல் மோசடிகளைச் செய்தவர்கள்,குற்றச்சாட்டுக்களை உடையவர்கள் என அனைவரையும் பொதுமக்கள் நிராகரிக்கவேண்டும். இந்தச் செயற்பாடு கிராம மட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இதன்ஊடாகவேநாட்டில் உண்மையான மாற்றத்தினை உருவாக்க முடியும். புதிய அரசியல் கலாசாரத்தினை கட்டியெழுப்ப முடியும் – என்றார்.

## 40 ஆண்டுகளின் பின் யாழ். நகரிலிருந்து திருக்கேதீச்சர சிவபெருமானுக்குக் கொடி



வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயவருடாந்தமகோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு, கொடிச்சீலைஉபயகரார்களுக்கானகளாஞ்சிவழங்கும்நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. 40 ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்துமன்னாருக்குகொடிச்சீலை எடுத்துச் செல்லப்படவுள்ளது.

திருக்கேதீஸ்வரஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளை தொடர்ந்து திருநெல்வேலி வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் உள்ள சிவபெருமானுக்கு இன்று காலை விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கானகளாஞ்சி எடுத்துச் செல்லப்பட்டு

திருநெல்வேலி கென்னடி வீதியில்உள்ளசண்முகநாதன் கபிலன் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டு பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும் வழங்கிவைக்கப்பட்டது.

இநிகழ்வில்திருக்கேதீஸ்வர ஆலய பிரதம சிவாச்சாரியார் மற்றும் ஆலய திருப்பணி சபையைசேர்ந்தஉறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர். 2

## காரைநகரில் இன்று முள்ளிவாய்க்கால் கஞ்சி




இலங்கைதமிழரசுக்கட்சியின் காரைநகர்மூலக்கிளையினால் இன்று காலை காரைநகர் வலந்தலை மடத்துக்கரை முத்துமாரியம்மன் ஆலய முன்றலில்முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

காரைநகர்தமிழரசுக்கட்சி மூலக்கிளையின்செயலாளரும் காரைநகர் பிதேச சபை முன்னாள் தவிசாளருமான கணேசபிள்ளைபாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில்முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளிற்கு ஈகச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டுடன்அஞ்சலியும் செலுத்தபட்டது.

இதன்பொழுதுகாரைநகர் பிரதேச சபையின் இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள் ,பொதுமக்கள் எனபலரும்கலந்துகொண்டனர். (03)

## சீனி, பால்மா விலைகள் சதொசவில் குறைப்பு



லங்கா சதொச நிறுவனம் இன்று(15) முதல் நடைமுறைப்படும் வகையில் இரண்டு நுகர்வுப் பொருட்களின் விலையை குறைக்க உள்ளதாக அறிவித்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டு 243 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

அத்துடன், 400 கிராம் பால்மாவின் விலையும் 60 ரூபாவால்குறைக்கப்பட்டு 1080 ரூபாவிற்குவிற்பனை செய்யப்படும் என அந்த நிறுவனம்தெரிவித்துள்ளது.

## குமுதினிப் படுகொலைகளுக்கு நெடுந்தீவில் இன்று நினைவேந்தல்



குமுதினிப் படகுப படுகொலையின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று காலை 9 மணிக்கு நெடுந்தீவில் இடம்பெற்றது.

குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்குப் புறப்பட்ட குமுதினிப் படகை இடைநடுவில் மறித்த இலங்கைக் கடற்படையினர் படகில் இருந்தவர்களை வெட்டிப் படுகொலை செய்தனர். அந்தச்சம்பவத்தில் உயிரிழந்த 36 பேரின் நினைவாக நெடுந்தீவு இறங்குதுறையிலுள்ள நினைவாலய வளாகத்தில் நினைவேந்தல் இடபெற்றது.

காலை 8.15 மணிக்கு நெடுந்தீவு மாவிலி துறை முகத்தில் அமைந்துள்ள புனித சவேரியார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டி திருப்பலியும், சம நேரத்தில் மாவிலி துறை முகத்தில்அமைந்துள்ளவீரபத்திர பிள்ளையார் ஆலயத்தில் ஆத்மா சாந்தி வேண்டி சிறப்புப் பூஜையும் இடம் பெற்றது. இதனைத்தொடர்ந்து காலை 9 மணிக்கு குமுதினிப் படுகொலை நினைவேந்தல் குழுவின் நெடுந்தீவு பிரதேச தலைவர் வி.ருத்திரன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நினைவுத்தூபிக்கான நினைவுச்சுடர் ஏற்றல் மற்றும் மலர் அஞ்சலி செலுத்துதல் ஆகிய நிகழ்வுகளுடன் பசுந் தீவு ருத்திரனின் குருதியின் குமுறல்கள் என்ற கவிதை நூலும் வெளியிடப்பட்டது. 2

# வடக்கு, கிழக்கில் காணிகளை அபகரிக்க இடமளிப்பது நல்லிணக்க விடயங்களுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும்

## ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஹக்கீம் கோரிக்கை

திருகோணமலை பிரதேசத்தில் சியம் நிகாய மஹாநாயக்க தேரர்களின் வழிபாட்டு நிகழ்வை தடுக்க முற்பட்டால், பாரிய அழிவு ஏற்படும் என சரத் வீரசேகர எம்.பி. தெரிவித்திருக்கும் விடயம் பாரிய அச்சுறுத்தலாகும். அதேநேரம் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தொடர்ந்தும் காணிகளை அபகரிக்க இடமளித்தால், அது இனப்பிரச்சினைக்குரிய தீர்வுக்கான நல்லிணக்க விடயங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அஷ்வசும வேலைத்திட்டம் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

காணி அபகரிப்புகள் அந்த மக்களை வறுமை நிலைக்கும் வேறு பிரச்சினைகளுக்கும் தள்ளிவிடுகின்ற பிரதான பிரச்சினையாகும்.

யுத்தத்துக்கு பின்னர் காணி அபகரிப்பு பிரச்சினை குறிப்பாக, வடக்கில் பாரியளவில் இடம்பெற்று வருகிறது. அதனால்தான் காணி அபகரிப்புகளை உடனடியாக நிறுத்துமாறு தமிழ் அரசியல் கட்சிகளுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக தமிழ் ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

காணி அபகரிப்பு வடக்கு, கிழக்கில் இன்னும் இடம்பெற்று வருவதை காண்கிறோம்.

மேலும், திருகோணமலை பிரதேசத்தில் சியம் நிகாய மஹாநாயக்க தேரர்களின் வழிபாட்டு நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடுக்க முற்பட்டால் பாரிய அழிவு ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்திருக்கிறார். இது பாரிய அச்சுறுத்தலாகும். இதனை சாதாரணமாகக் கருத முடியாது.

அதேநேரம் இந்த அச்சுறுத்தலை விடுக்கும் சரத் வீரசேகர எம்.பி.தான் தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற மேற்பார்வை குழுவின் தலைவர்.

இப்படி அச்சுறுத்தல் விடுக்கும் ஒரு தலைவரிடமிருந்து முன்மாதிரி, அர்ப்பணிப்பை எதிர்பார்க்க முடியுமா என்ற கேள்வி எமக்கு எழுகிறது. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

அதேநேரம் கிழக்கில் சில பிரதேசங்களை பௌத்தமயமாக்கும் இவ்வாறான சித்து விளையாட்டினால் நாட்டில் இருக்கின்ற இனப்பிரச்சினை இன்னும் படுமோசமான முறையில் பாதிக்கப்படப் போகிறது.

மேலும், திருகோணமலை வெள்ளைமணல் பிரதேசத்தில் தொல்லாயிரம் ஏக்கர் நிலப்பரப்பை விமானப்படையினர் சுவீகரித்துக்கொள்ள முயற்சி இடம்பெறுவதாக அறியக் கிடைத்தது.



அந்த பிரதேசத்தின் ஒரு பகுதியில் குடிமக்களின் வீடுகள் அமைந்திருக்கின்றன. அடுத்த பகுதியில் கடல் அமைந்திருக்கிறது. அந்த இரண்டுக்கும் இடையில் இருக்கும் பாரிய நிலப்பரப்பை, பாதுகாப்பு தேவைகளுக்காக எனத் தெரிவித்துக்கொண்டு விமானப்படை சுவீகரிக்க திட்டமிட்டு வருகிறது. ஆனால், உல்லாச பயணிகளின் தேவைகளுக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கே இதனை சுவீகரிக்கப்போவதாக தெரியவருகிறது. இதனால் அங்கு தொழில் வாய்ப்புக்களில் ஈடுபட்டு வரும் மக் களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுபோன்று காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறோம். இவ்வாறான நடவடிக்கை கடந்த காலங்களிலும் இடம்பெற்று வந்தன. தற்போதும் இடம்பெற்று வருகின்றன.

இதே பிரச்சினை திருகோணமலை அரிசிமலை பிரதேசத்திலும் இடம்பெற்று வந்தது.

இந்த காணிகளை பாதுகாத்துத் தருவதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

அத்துடன். இந்த காணிகளை அபகரிக்க தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் அமைச்சர் பாதுகாப்பு அதிகாரிகளுடன் மதகுருமார்களும் சேர்ந்து வருகின்றனர். துப்பாக்கிகளுடனே வருகின்றனர்.

இப்படியான அநியாயங்களுக்கு வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் தொடர்ந்தும் இடமளித்தால், இனப்பிரச்சினைக்குரிய தீர்வுக்கான நல்லிணக்க விடயங்களுக்கு என்ன நடக்கும்?

சர்வதேசத்தின் முன்னிலையில், ஜெனீவாவில் இந்த அரசாங்கம் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டு வருகிறது என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருவதற்கு மத்தியில் இவ்வாறு காணிகளை அபகரிக்கும் விடயங்கள் தொடர்ந்தால், மக்களை வறுமை நிலையில் இருந்து மீட்பதற்கு எடுக்கும் முயற்சிகளில் பயன் இல்லாமல் போகும். – என்றார்.

### மோ.சைக்கிள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தில் சாவடைந்துள்ளார். நேற்றிரவு இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (02)

### மஹிந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாமலையும், வீழ்த்திவிட்டதாகவே கருதுகின்றார்கள். எதிர்காலத்தில் போராடவிருப்பவர்களும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வீழ்த்துவதற்கு முயற்சிக்கின்றார்கள்.

உண்மையில், போராட்டக்காரர்கள் எம்மை வீழ்த்தவில்லை. மாறாக நாட்டையும் சதாரண மக்களையுமே பின்னடைவதற்கு வழிசமைக்கின்றார்கள். தமது வீடுகளிலும் பிள்ளைகள் இருக்கின்றார்கள் அவர்களுக்கு எதிர்கலாம் தேவையாக இருக்கின்றது என்பதையும் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும் – என்றார். (02)

### 40 ஆண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் மே 24 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

1982ஆம் ஆண்டிற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்தே திருக்கேதீஸ்வரத்திற்குக் கொடிச்சீலை வழங்கப்பட்ட நிலையில் போர்க் காலத்தில் அந்த முறை கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த வருடம் திருக்கேதீஸ்வரத்திற்கு கும்பாபிகேம் நடைபெற்ற நிலையில் 40 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் திருக்கேதீச்சர ஆலயத்திற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கப்பட வுள்ளது. (03)

# நாடாளுமன்றத்தில் முரண்பாடற்ற தீர்மானங்களை எடுக்க அரசு பொறுப்புடன் செயற்படல் வேண்டும்!

## வலியுறுத்துகிறார் கலாநிதி ஹர்ஷ டி சில்வா



தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் அரசாங்கம் குறிப்பாக நிதியமைச்சு தன்னிச்சையாக செயற்படக் கூடாது. தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டதன் பின்னர் சமூகக் கட்டமைப்பில் தோற்றம் பெறும் பிரச்சினைகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே இந்த விடயத்தில் நாடாளுமன்றத்தின் ஊடாக முரண்பாடற்ற ஒரு தீர்மானத்தை எடுக்க அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளிய அணியினர் ஆட்சியில் இருக்கும் வரை சர்வதேச நாணய நிதியம் அல்ல முழு உலகமும் ஒத்துழைப்பு வழங்கினாலும் பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள முடியாது. வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியிலும் ஊழல் மோசடி முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை.

சுனாமி, கொவிட், எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய விவகாரங்களில் கொள்ளையடித்தவர்கள் 10 கிலோகிராம் அரிசி விநியோகத்தையும் விட்டு வைக்கவில்லை. 10 கிலோகிராம் அரிசி பொதி ஒன்றின் ஊடாக 10 ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. உண்மையில் வெட்கித்தலைகுனிய வேண்டிய செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபடுகிறது.

தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தை அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் தொழில்நுட்ப ரீதியில் ஆராய வேண்டும். பொருளாதார மீட்சிக்காகவே சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. ஆகவே சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு மற்றும் முன்வைக்கப்படும் நிபந்தனைகள் தொடர்பான நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.

வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதாகவும் தேசிய கடன்களை மறுசீரமைக்கப்போவதில்லை எனவும் அரசாங்கம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது. ஆனால் தற்போது தேசிய கடனை மறுசீரமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய கடன்களை மறுசீரமைக்கும் போது ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் உட்பட வங்கி ஆகியவற்றுக்கு ஏதாவதொரு வழிமுறையில் பாதிப்பு ஏற்படும் என்பதே உண்மை. இந்த விடயத்தில் அரசாங்கம் நாட்டு மக்களிடம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும்.

முன்னாள் நிதியமைச்சர் காலஞ்சென்ற டி.பி.இளங்கரத்னவால் அறிமுகப்படுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்தின் 1958 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க சட்டத்தை திருத்தும் வகையில் தனிநபர் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வர எதிர்பார்த்துள்ளோம்.

தேசிய கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் அரசாங்கம் குறிப்பாக நிதியமைச்சு தன்னிச்சையாக செயற்படக் கூடாது. தேசிய கடன் மறுசீரமைக்கப்பட்டதன் பின்னர் சமூக கட்டமைப்பில் தோற்றம் பெறும் பிரச்சினைகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே, இந்த விடயத்தில் நாடாளுமன்றத்தின் ஊடாக ஒரு தீர்மானத்தை எடுக்க அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும். – என்றார்.

### குமுதினிப்...









(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சியும் அங்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் நெடுந்தீவு பகுதி மதத்தலைவர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

1985ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி நெடுந்தீவு துறைமுகத்திலிருந்து 64 பயணிகளுடன் பயணித்த குமுதினி படகு மறுநாள் காலை வரையில் கரை வந்து சேரவில்லை. உயிரிழந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் தன் மடியில் வைத்தபடி தத்தளித்த குமுதினியை மறுநாள் கரையிலிருந்து தேடிச் சென்ற படகு கட்டியிழுத்து கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தது.

# கெப் ரக வாகனம் கால்வாயினுள் வீழ்ந்து அநுராதபுரத்தில் விபத்து!



அநுராதபுரம், ராஜாங்கனை பகுதியில், கெப் வாகனம் ஒன்று வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வீதிக்கு அருகில் காணப்பட்ட கால்வாயில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றுள்ளதுடன், வாகனத்தைச் செலுத்திச் சென்றவருக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை.

பிரசவத்துக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள தனது மனைவிக்கு உணவு எடுத்துச் சென்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மணல் அகழ்வு அனுமதி மட்டக்களப்பில் நிறுத்தம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோதமானதும் அபாயகரமானதுமான மணல் அகழ்வுகள் இடம்பெற்றமைக்கான விரிவான சாட்சியங்களைத் தொடர்ந்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் மணல் அகழ்விற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதையும் புதுப்பிப்பதையும் உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி செயலகம் உத்தரவிட்டுள்ளது.

புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு, ஜனாதிபதியின் அலுவலகத்தின் இந்த உத்தரவு அனுப்பபப்பட்டுள்ளது.

சட்டவிரோத மணல் அகழ்வு நடத்த உரிமத் திட்டம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக அதிகாரிகளுக்கு தொடர்ந்து அறிக்கைகள் கிடைத்துள்ளன.

இந்தநிலையில் மாவட்டத்தில் நீர்வழிப்பாதைகளுக்கு அருகில் உள்ள பெரும்பாலான உணர்திறன் வாய்ந்த பகுதிகள் சட்டவிரோத சுரங்கத் தொழிலாளர்களால் பெரிதும் அழிக்கப்பட்டுவிட்டன.

அத்துடன் சட்டவிரோத மணல் கடத்தலால் கிராமப்புற சாலைகள் பெருமளவில் சேதமடைந்துள்ளதையும் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உண்மை மற்றும் நல்லிணக்க செயலகத்துக்குப் பொறுப்பாக வணிக சட்டத்தரணி அசங்க குணவன்சவை நியமிக்க முடிவு?

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவோடு இணைந்ததாக ஸ்தாபிக்கப்படவுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க செயலகத்தின் செயலாளர் நாயகமாக சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் எவ்வித பரிச்சயமும் அற்ற வணிகத்துறை சார் சட்டத்தரணி அசங்க குணவன்சவை நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் எழுந்திருப்பதுடன், இது தொடர்பாக நீதியரசர் நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கும் முறைப்பாடுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், உண்மை மற்றும் நல்லிணக்க செயலகத்தின் செயலாளர் நாயகமாக சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை அறிந்த, அதில் நன்கு பரிச்சயமுடைய ஒருவரே நியமிக்கப்பட வேண்டும் என்று தமது இறுதி அறிக்கையில் பரிந்துரைப்பதற்கு ஆணைக்குழு உத்தேசித்திருப்பதாக அறியமுடிகிறது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மற்றும் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பாக ஆராய்தல், புலனாய்வு செய்தல், அறிக்கையிடல் மற்றும் அவசியமான முன்மொழிவுகளைச் செய்தல் ஆகியவற்றுக்காக உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி.நவாஸ் தலைமையில் ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாந்து, ஓய்வுபெற்ற மாவட்ட செயலாளர் நிமல் அபேசிறி மற்றும் யாழ். நகர முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் அடங்கிய ஆணைக்குழு கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டது.

அந்த ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த ஆணை கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் முடிவுக்கு வந்த நிலையில், அதன் இறுதி அறிக்கை டிசெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும், அந்த ஆணைக்குழுவுக்கான ஆணை இவ்வாண்டு ஜனவரி 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு, பின்னர் ஏப்ரல் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு, தற்போது இம்மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டவரைவைத் தயாரிப்பதற்கான குழுவொன்று உருவாக்கப்பட்டு, அதன் தலைவராக சர்வதேச பொருளியல் சட்டத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற வணிகத்துறைசார் சட்டத்தரணியான கலாநிதி அசங்க குணவன்ச என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் எவ்வித பரிச்சயமும் இல்லாத அசங்க குணவன்ச, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான மிக முக்கியமான பூர்வாங்க நடவடிக்கைக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் தமிழ் அரசியல் பிரதிநிதிகளும் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

அதுமாத்திரமன்றி, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உருவாக்கத்தின்போது அதனோடு இணைந்ததாக ஸ்தாபிக்கப்படவுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க செயலகத்தின் செயலாளர் நாயகமாகவும் அசங்க குணவன்சவை நியமிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது.

இந்நிலையில், வணிக சட்ட உதவி நிலையமொன்றை (தனியார்) பிரத்யேகமாக நடத்திவருவதுடன் முழுநேர சட்டத்தரணியாக பணியாற்றிவரும் அசங்க குணவன்சவால் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சார்ந்த பணிகளில் எவ்வாறு முழுமையான சிரத்தையுடன் ஈடுபட முடியும் என்று கேள்வி எழுப்பப்பட்டிருப்பதுடன் தென்னாபிரிக்கா, பேரு மற்றும் சிலி போன்ற நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்களுக்குப் பொறுப்பாக சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் தேர்ச்சி பெற்றவர்களும் அப் பணிக்கு முழுமையாக நேரத்தை ஒதுக்கக்கூடியவர்களுமே நியமிக்கப்பட்டனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.



இது தொடர்பாக நீதியரசர் நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கும் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கும் நிலையில், இதுபற்றி ஆணைக்குழு விசேட அவதானம் செலுத்தியிருப்பதாக அறிய முடிகின்றது.

அத்தோடு, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நம்பகத்தன்மையைக் கேள்விக் குட்படுத்தக்கூடிய இத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையில் முக்கிய பரிந்துரையொன்றையும் முன்வைப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாக நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, உண்மை மற்றும் நல்லிணக்க செயலகத்தின் செயலாளர் நாயகமாக சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை அறிந்த, அதில் நன்கு பரிச்சயமுடைய ஒருவரே நியமிக்கப்படவேண்டும் என்று சமர்ப்பணங்கள் செய்யப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உருவாக்கம் பற்றி கலந்துரையாடுவதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச ஆகியோர் கடந்த மார்ச் மாதம் 21 முதல்–25ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த விஜயத்தின்போது சட்டத்தரணி அசங்க குணவன்சவும் அழைத்துச்செல்லப்பட்டார் என அறியமுடிகிறது. இருப்பினும், இதுபற்றி கேட்டறிவதற்காக அமைச்சர்களான அலி சப்ரி மற்றும் விஜயதாஸ ராஜபக்சவை தொடர்புகொள்ள முற்பட்டபோதிலும், அம்முயற்சி பலனளிக்கவில்லை.

# கொழும்பில் கோர விபத்தில் சிக்கி உயிரிழந்த இளம் பெண்




கொழும்பின் புறநகர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளம் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அதுருகிரிய போர சந்திக்கு அருகில் மோட்டார் சைக்கிள் கெப் வண்டியுடன் மோதியதில் விபத்தில் விபத்து ஏற்பட்டுள்ளது.

சசினி யசோதா கிருஷ்ணரத்ன என்ற 22 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனையின் போது விபத்தில் ஏற்பட்ட காயம் காரணமாகவே உயிரிழந்துள்ளார் என உறுதி செய்யப்பட்டுள்ளது. ஹோமாகம, ஹபரகட, போதிராஜா மாவத்தையில் வசிக்கும் சசினி யசோதா, தனியார் வங்கி ஒன்றில் தொலைபேசி இயக்குநராக பணிபுரிந்து வருகின்றார். வீட்டில் இருந்து மாலம்பே நோக்கி சென்று கொண்டிருந்த போது, கோவின்ன மாவத்தையில் இருந்து அத்துருகிரிய போர சந்திக்கு அருகில் பிரதான வீதிக்கு சென்று கொண்டிருந்த கெப் வண்டியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நல்லடக்கம் செய்யப்பட்டதாகக் குடும்பத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

# சிறைச்சாலை அதிகாரி ஒருவரை மண்டியிடசெய்து கொலை மிரட்டல்

## விசாரணைகள் முன்னெடுப்பு

கொழும்பு, புதிய மகசின் சிறைச்சாலையின் அதிகாரி ஒருவரின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாத மூவர் அவரை மண்டியிடச்செய்து அச்சுறுத்தி, கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலி–ஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் உள்ளக விசாரணையை ஆரம்பித்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய மகசின் சிறைச்சாலையின் ஒழுக்கவியல் திணைக்களத்தில் இளைஞர் பிரிவுக்கான கண்காணிப்பாளராக கடமையாற்றும் குறித்த அதிகாரியின் மினுவாங்கொடை பகுதியில் அமைந்துள்ள வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த மூவரால் இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வீட்டிற்குள் நுழைந்த மூவரும் அவரைத் தாக்கி மண்டியிட செய்து தலையில் துப்பாக்கியை வைத்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போது அவர்களுள் ஒருவர் 'நீ சிறைச்சாலைக்கு செல்கிறாயா? அங்கு இருப்பவர்களை திருத்துவதற்கு முயற்சிக்கிறாயா? உன்னால் அவற்றை செய்ய முடியாது. சிறைச்சாலைக்குள் போதைப் பொருள்களை கொண்டு வருவதை உன்னால் நிறுத்த முடியாது. இவற்றில் தலையிடுவதை நிறுத்தி விட்டு வேறு வேலையை பார்த்து கொள். இதனை பொலிஸில் கூறினால் உன்னை நான் பார்த்துகொள்கிறேன்' என அச்சுறுத்தியதாக பொலி–ஸார் தெரிவித்துள்ளனர்.

மூவரில் ஒருவர் இதனை கையடக்கத் தொலைபேசியில் வீடியோ எடுத்து விட்டு அதிகாரியின் தலையில் துப்பாக்கியால் தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் மினுவாங்கொடை பொலிஸில் முறைப்பாடு செய்த அதிகாரி மினுவாங்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கம்பஹா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் உள்ளக விசாரணையை ஆரம்பித்துள்ளதுடன், அரச புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தாக்குதலுக்கு உள்ளான அதிகாரி கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் கொண்டுவரப்படுவதைத் தடுப்பதற்காக கடந்த காலங்களில் பல வெற்றிகரமான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. அவர் மீது கோபம் கொண்ட கைதி ஒருவரே இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டு இருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். மேலும் இந்த அதிகாரிக்கு இதற்கு முன்பும் தொலைபேசியில் கொலை மிரட்டல் வந்துள்ளதுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மினுவாங்கொடை பொலி–ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சீரற்ற காலநிலையினால் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன தெற்கின் பல பகுதிகள்









நாட்டின் பல பகுதியில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக நில்வலா கங்கை மற்றும் கிங் கங்கை பெருக்கெடுத்து ஓடுவதால், மாத்தறை மாவட்டத்தின் தாழ்வான பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

தவலம, நெலுவ, மொரவக, அக்குரஸ்ஸ, அத்துரலிய, பிடபெத்தர மற்றும் கொட்டபொல ஆகிய தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மேலும், நெலுவ மற்றும் ஹப்பிட்டிய பகுதிகளில் உள்ள தாழ்நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தெனிய – அக்குரஸ்ஸ வீதியில் பல மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளதால் வீதி போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதன்காரணமாக அந்த பாதையில் பஸ் போக்கு–வரத்தும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

நெலுவ – மொரவக பிரதான வீதியில் அலபலதெனிய பிரதேசத்தில் மண் மேடு சரிந்து வீழ்ந்துள்ளமையால் குறித்த வீதியின் போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும், அக்குரஸ்ஸ – தவலம பிரதான வீதி தலங்கல்ல பிரதேசத்திலிருந்து வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதேவேளை, தென் மாகாணத்தில் பெய்து வரும் கடும் மழையால் கிரமாரா நீர்த்தேக்கம் தற்போது நிரம்பி வழிவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தெய்யந்தர, சீனிபல்ல,

மாகதுர மற்றும் ஆதபான ஆகிய பிரதேசங்களில் உள்ள கிரமாரா நீர்த்தேக்கத்தின் இருபுறங்களிலும் உள்ள மக்களை அவதானமாக இருக்குமாறு மாத்தறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால், 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எல்லைகளில் அச்சுறுத்தப்படும் தமிழர்கள்

**முல்லைத்தீவு மாவட்ட எல்லைப் பகுதியான மணலாற்றில் பெண் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார். கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பெண்ஒருவரே காட்டுக்குள் இழுத்துச்செல்லப்பட்டு இருவரால் கொடுமைக்குள்ளாகி இருக்கின்றார். எல்லையோர மாவட்டங்களில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் குற்றங்கள் அண்மைக் காலமாக அதிகரித்திருக்கின்றன என்பதற்கான ஆகக் கடைசித் தகவல் இது.**

**இதற்கு முன்னர் எல்லைக் கிராம மக்களின் வயல்கள் சிங்களவர்களால் அபகரிக்கப்பட்டன, பின்னர் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அவை அபகரிக்கப்பட்டு சிங்களவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன, எல்லைக் கிராமங்களில் இருந்த சிலர் மீது தாக்குதலும் நடத்தப்பட்டது, வெடுக்குநாறிமலை போன்ற இடங்களில் இந்து மதவழிபாட்டிடங்கள் தாக்கி அழிக்கப்பட்டன, அவற்றின் பாதுகாவலர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு நீதிமன்றங்களுக்கும் காவல்நிலையங்களுக்கும் அலைக்கழிக்கப்படுகின்றார்கள். இப்போது எல்லாவற்றினதும் உச்சமாக பெண் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுகின்றார்.**

**இவை அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும்போது எல்லைக் கிராமங்களைவிட்டுத் தமிழர்களைத் துரத்தியடிப்பதற்கான தெளிவான வரைபடம் ஒன்று தெரிகின்றது. எல்லைக் கிராமங்கள் நகரங்களில் இருந்து தூர இடங்களில் இருக்கின்றன. அங்கு சிறிய எண்ணிக்கையான தமிழர்களே இருக்கின்றார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. உதவியும் இல்லை. அந்தப் பகுதிகளில் படை முகாம்கள் இருக்கின்றன. ஆனால், அவர்கள் அங்குள்ள சிங்களவர்களைப் பாதுகாப்பதையே தமது கடமையாகக் கொள்கிறார்கள் என்பதே நிலைமையைச் சிக்கலுக்குள்ளாக்குகின்றது.**

**இன்று நடந்திருக்கக்கூடிய பாலியல் வன்கொடுமையும் கூட, படையினரின் நிலை ஒன்றிலிருந்து வெகுதூரத்தில் நடந்த ஒன்றல்ல. சம்பவம் நடந்த பகுதியில் படையினரின் நடமாட்டமே அதிகம் இருக்கின்றது. அப்படியிருந்தும் துணிந்து இருவர் ஒரு பெண்ணை, அதுவும் பணி நேரத்தில் கடத்திச் சென்று வன்கொடுமை செய்யத் துணிகின்றார்கள் என்றால், அதன் பின்னணி என்ன? எல்லைகளில் இருந்து தமிழர்களை அச்சுறுத்தித் துரத்திவிட்டு அந்தப் பகுதிகளை முழுமையாக ஆக்கிரமிப்பதற்கான நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இதனைப் பார்க்க முடிகின்றது.**

**1980களிலும் இதேபோன்ற நடவடிக்கைகளே இடம்பெற்றன. தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்கள். அவர்களின் கால்நடைகள் வெட்டிக் கொல்லப்பட்டன. திடீர் திடீரென இரவில் கிராமங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஆயுதங்கள் தவிர இத்தகைய பிரச்சினைகளுக்கு வேறு தீர்வு எதுவும் இல்லை என்று தமிழ் இளைஞர்களைக் கருத வைத்த கொடுமைகளில் இவைக்கும் முக்கியமான பங்குண்டு. அதன் விளைவாக இந்த நாடு 30 வருடங்கள் மிக மோசமான உள்நாட்டுப் போரை எதிர்கொண்டது.**

**போர் முடிவுற்றபோதும் எல்லைகளில் இருந்து தமிழர்களை விரட்டியடிக்கும் நோக்கம் இன்னும் முற்றுப்பெறவில்லை என்பதையேஅண்மைய சம்பவங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.**

# சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டாலே நாட்டை முன்னேற்ற முடியுமாக இருக்கும்

## நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச கூறுகிறார்

நாடு ஒன்று முன்னேறுவதாக இருந்தால் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும். உலகில் முன்னேற்றமடைந்திருக்கும் நாடுகளில் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

அத்துடன் நீதி அமைச்சு சரியான முறையில் நடவடிக்கை எடுக்காமல் இருந்திருந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள இன்னும் ஒரு வருடம் வரை செல்லும் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நீதி அமைச்சின் நடவடிக்கைகளை திறம்பட மேற் கொள்வது தொடர்பாக இடம்பெற்ற பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாடு ஒன்று முன்னேறுவதாக இருந்தால், அந்த நாட்டின் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்படவேண்டும். உதாரணமாக சிங்கப்பூர் ஒரு காலத்தில் எம்மைவிட மிக மோசமான நிலையிலேயே இருந்தது. நாங்கள் கடந்த காலத்தில் எதிர்கொண்டிருந்த வரிசை யுகத்தைவிட மோசமான நிலையே அங்கு இருந்தது வந்தது.

ஆனால், இன்று அதற்கு மாற்றமான நிலையே காண்கிறோம். டொலர் மில்லியன் கணக்கில் கையில் வைத்துக்கொண்டு பெண் பிள்ளை ஒருவருக்குத் தனியாக வீதியில் சென்று வர முடியும். பயப்படத்தேவையில்லை. அந்தநாட்டில்சட்டத்தின்ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டிருப்பதே இதற்கு காரணமாகும்.

அதேநேரம் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்படாததால், தங்கம், வெண்கலம் இருக்கும் தென் ஆபிரிக்க நாடுகள் இன்னும் முன்னேற்றம் இல்லாமல் இருக்கின்றன. அந்த நாடுகளின் பெரும்பாலானவர்கள் வறுமைநிலையிலேயே இருக்கின்றனர்.

ஆனால், எமது நாட்டில் அனைத்துவளங்களும் இருக்கின்றன. எமக்கு இருக்கும் வளங்கள் இந்தியாவில் கூட இல்லை. என்றாலும் நாங்கள் இருக்க வேண்டிய இடத்தில் இன்னும் இல்லை. ஏதோ ஓர் இடத்தில் எமக்கு தவறி இருக்கிறது. அதனை நாங்கள் சரி செய்துகொண்டால் எமக்கும் சிங்கப்பூர் போன்ற நாடுகளின்



நிலைக்கு வரமுடியும். அதற்காக எமது அமைச்சுக்களின் செயற்திறமையை அதிகரிக்க வேண்டும். சட்டத்தின்ஆட்சியை உறுதிப்படுத்த வேண்டும்.

அத்துடன் எமக்கு சர்வதேசநாணயநிதியத்திடம்கடன் பெறவேண்டிஏற்பட்டது. வேறு மாற்று வழி இருக்கவில்லை. மற்ற நாடுகளுக்கு இந்தக் கடனைப் பெற்றுக்கொள்ள இலகுவாகவில்லை. நாணய நிதியத்தின்பணம்நிதிஅமைச்சுக்கும் திறைசேரிக்கும் கிடைத்துள்ளது. அவர்கள் தங்களின் நடவடிக்கையை சரியான முறையில் செய்ததாக மக்கள் மத்தியல் கருத்தொன்று இருக்கிறது.

ஆனால், நீதி அமைச்சு சரியான முறையில் செயற்படாவிட்டால் நாணய நிதியத்தின் பணத்தை பெற் றுக்கொள்ள இன்னும்ஒருவருடம் செல்வதற்கு இடமிருக்கிறது. குறித்த பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நிபந்தனைகளைபூரணப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து விடயங்களில் நூற்றுக்கு 90 வீதம் மேற்கொண்டது நீதி அமைச்சாகும்.

நீதிமன்றக் கட்டமைப்பு தொடர்பில்நாட்டுமக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. அந்தநம்பிக்கை இல்லாமல் போனால் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. நீதி அமைச்சின் வெற்றி தோலியிலேயே ஏனைய அமைச் சுக்களின் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படுகிறது. அதனால் நாடொன்றில் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்படாவிட்டால் மக்கள் வீதிக்கிறங்குவார்கள்.

இனங்களுக்கிடையில் நம்பிக்கைஉறுதிப்படுத்தாவிட்டால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இனங்களிக்கிடையில் சமாதனத்தை ஏற்படுத்தாமல் நாட்டொன்றை முன்னேற்ற முடியாது. – என்றார்.

# கொழும்பில் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்ட தமிழ்பெண் இறப்பு

வெலிக்கடை பொலிஸாரிடம் விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட தமிழ் பெண் ஒருவர் திடீரென சுகவீனமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

ராஜகிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றில் வீட்டு பணியில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர், அந்த வீட்டில் பொருள்களைத் திருடிச் சென்றார் என்ற முறைப்பாட்டிற்கமைய, அவர் விசாரணைக்காக அழைக்கப்பட்டார்.

பதுளை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய செல்வராசா குமாரி என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

பெண் வேலை செய்த வீட்டின் உரிமையாளர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த முறைப்பாட்டிற்கமைய பணிப்பெண் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துவந்தபோது, தனக்குசுவாசிப்பதில் சிரமம் இருப்பதாகக் கூறியதால், அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையில் பணிப்பெண் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மரணம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இன்னும் சரியான வழியைத் தேடாத இலங்கை நெருக்கடிக்கான காரணத்தை கூறும் தம்மிக்க

இலங்கையில் நிலவும் வரி நெருக்கடிக்கு டொலர் பற்றாக்குறையே காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா குற்றம் சுமத்தியுள்ளார்.

அம்பாந்தோட்டை – மித்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் நிலவும் வரி நெருக்கடிக்கு டொலர் பற்றாக்குறையே காரணம்.

டொலரின் பற்றாக்குறை காரணமாக, இலங்கையின் இறக்குமதிகள் கணிசமான அளவு குறைந்துள்ளன.

இதன்மூலம் சுங்க வரி மற்றும் ஏனைய வரிகள் மூலம் ஈட்டப்படும் வருமானம் நேரடியாகப் பாதிக்கப்படுகின்றன.

சுங்க வரிகள் மற்றும் வரிகளில் இருந்துஇழந்தபணத்தைசம்பாதிப்பதற்காக, மற்ற வரிகள் அதிகரிக்கப்படுகின்றன.

இதற்குப்பின்னால்உள்ள அடிப்படை பிரச்சினை டொலர் பற்றாக்குறையாகும். டொலர்களை சம்பாதிக்க இன்னும் சரியான வழியை இலங்கை தேடவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.



# அதிசொகுசு கார்களில் வந்து மாடுகள் திருடும் மர்ம கும்பல்!

நாடாளவியரீதியில் கறவை பசுக்கள் திருடப்படும்சம்பவங்களைதடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆராயும் நோக்கில் விவசாயத்துறை அமைச்சில் விசேட கலந்துரையாடல்ஒன்றுஇடம்பெற்றுள்ளது.

ஒருமாவட்டத்தில்சராசரியாகபசுக்கள் திருடப்படும் சம்பவங்கள் குறைந்தது 5 தொடக்கம் 6 பதிவாவதாக இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்தகைய திருட்டு சம்பவங்களில் குறிப்பிட்ட சந்தேகநபர்கள் அதிசொகுசு வாகனங்களில் வந்து இந்த கறவை பசுக்களை கடத்திச் செல்கின்றனர் எனத் தெரிய வந்துள்ளது.

இத்தகையதிருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புபட்ட குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனைகளை மேலும் தீவிரப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளவிருப்பதாக அமைச்சர் மஹிந்த அமரவீர இங்கு தெரிவித்தார்.

# போதைப்பொருள் வலையமைப்பின் பம்மாகுழு பெண் உறுப்பினர் கைது

இலங்கையின் போதைப் பொருள் வலையமைப்பை வெளிநாட்டிலிருந்துவழிநடத்தும் பம்மா குழுவின் முக்கிய உறுப்பினரான பெண்ணொருவரை ஹெரோயினுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் நீண்ட நேரம் விசாரணை நடத்தியதில் அவர் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களை சந்தேக நபரின் கணவரின் தம்பியான விக்னேஷ் என்ற நபரே அனுப்பி வைத்துள்ளமையும் அம்பலமாகியுள்ளது.



விக்னேஷ் என்பவர் தற்போது வெளிநாட்டில்இருக்கும்ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரரான ஸ்டான்லி கென்னடி பெர்னாண்டோ என்ற பம்மா குழுவின் முக்கிய உறுப்பினராவார்.

அத்துடன் சந்தேக நபரின் கணவர் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தபோது கரையோரப் பொலிஸ் நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.